லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-7 இதழ்-4 செப்டம்பர்-2018 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



## திமுகவின் புதிய தலைமை சாதிக்குமா?





# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து

## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்





- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்





- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்

போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்



நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்

சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்



## ஒரே நேரத்தில் தேர்தல்: சாதகமா, பாதகமா?

மக்களவைத் தேர்தலையும் மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்று மத்திய அரசும் பாஜக தலைவர்களும் கோரிவந்த நிலையில், ஒரே நேரத்தில் தேர்தல் சாத்தியமற்றது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஓ.பி.ராவத் கூறியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணான இந்தக் கோரிக்கையை, வலுவற்ற காரணங்களின் அடிப் படையில் வலியுறுத்திவரும் பாஜக தலைவர்கள் அதைக் கைவிட வேண்டும் என்பதை உணர்த்தும் சமிக்ஞை இது. ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கு எண்ணற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங் களும் வாக்கு ஒப்புகைச்சீட்டுப் பதிவு இயந்திரங்களும் தேவைப்படும். சட்டப் பேரவையின் கால அளவு குறித்து அரசியல் சட்டத்திலும் திருத்தம் கொண்டுவர வேண்டி யிருக்கும் என்பதையும் ராவத் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

டிசம்பரில் நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலுடன், மிசோரம், சட்டீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய நான்கு மாநிலங்களுக்கான தேர்தலை நடத்துவது குறித்த பரிசீலனைகளையும் நிராகரித்திருக் கிறார். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை ஆதரிப்பவர் கள், 'ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்று இல்லாமல், மாநில அரசுகளின் ஆட்சிக் காலத்துக்கேற்ப தேர்தல் நடத்துவதால் பெருமளவு செலவு ஏற்படுகிறது; தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வருவதால் புதிய திட்டங்களைக் கொண்டுவர முடிவதில்லை' என்றெல்லாம் காரணங்களை அடுக்குகிறார்கள்.

உண்மையில், எல்லா மாநில சட்டமன்றத் தேர்தல்க ளையும் மக்களவைத் தேர்தலையும் நடத்த தேர்தல் ஆணையத்துக்கு சராசரியாக ரூ.8,000 கோடி மட்டுமே செலவாகிறது. இந்தியா போன்ற பெரிய ஜனநாயக நாட்டுக்கு இது பெரிய செலவு அல்ல. மேலும், ஒரே சமயத்தில்தான் தேர்தல் என்பது நடைமுறைப் படுத்தப்பட்டு, ஒரு சட்ட மன்றம் கலைக்கப்பட்டுவிட்டால், ஆளுநர் ஆட்சி மூலம் மத்திய அரசின் வசம் அரசு நிர்வாகம் சென்றுவிடும்.

இது கூட்டாட்சித் தத்துவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்குப் பரவலான அரசியல் கருத்தொற்றுமையும் வெவ்வேறு மாநில, தேசியக் கட்சிகளின் சட்டபூர்வ ஒத்துழைப்பும் தேவைப்படும். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு 24 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேவைப்படும். 12 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும், அதற்கு ஈடான வாக்கு ஒப்புகைச்சீட்டுப் பதிவு இயந்திரங்களும் கொள்முதல் செய்ய வேண்டி யிருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கும் பொருட்டு இந்தியாவுக்கு முன் இருக்கும் கேள்வி என்னவென்றால், தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட மன்றங் களின் பதவிக்காலத்தை ஒரே நேரத் தேர்தல் என்பதற்காக இப்போது குறைக்க முற்பட்டால் அது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தையும் கூட்டாட்சித் தத்துவத்தையும் அவமதிப்பதாகாதா? ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்த முற்பட்டால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள், சவால்களும் மிக அதிகம். எனவே, இந்த யோசனையைக் கைவிட்டுவிட்டு அடிப்படையான தேர்தல் சீர்திருத்தங் களில் கவனம் செலுத்துவது நல்லது.

– ஆசிரியர்

# பிளாஸ்டிக் இல்லா தமிழகம்



பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு உருவாக்கும் வகையில், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரத்தை, முதல்வர் பழனிசாமி, *23-08-2018* அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், துவக்கி வைத்தார். *2019* ஜன., *1* முதல், பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்க, அரசு முடிவு செய்துள்ளது. அப்போது, 'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு' இலச்சினையை, அறிமுகம் செய்து, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, www.plasticpollutionfreetn.org என்ற இணையதளத்தையும், அவர் துவக்கி வைத்தார்.

இந்த இணையதளத்தில், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான அவசியம்; பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பது; குறைப்பது; மறுசுழற்சி செய்வது குறித்தும் கூறப்பட்டு உள்ளன. பிளாஸ்டிக் ஒழிப்புக்கு, அரசு துறைகள் எடுக்க உள்ள நடவடிக்கைகள்; பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு திட்டத்தை செயல்படுத்தும், அரசு அலுவலர்களின் விபரங்களும் இடம் பெற்றுள்ளன.




அத்துடன், 'Platic Pollution Free Tamil Nadu' என்ற, 'மொபைல் ஆப்' வசதியும் துவங்கப்பட்டது. பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்துவ தற்கான குறும் படங்களும் வெளியிடப்பட்டன. பிளாஸ்டிக் பைகளுக்கு மாறாக, துணிப் பைகள், சணல் பைகள், காகிதப் பைகள் போன்றவற்றை உபயோகிப்பது குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த, அரசு சார்பில், விளம்பரத் தூதராக, நடிகர் விவேக் நியமிக்கப்பட்டுள்ளார். அவரை, முதல்வர் அறிமுகம் செய்து வைத்தார். பின், விழிப்புணர்வு பிரசாரத்தை துவக்குவதற்கு அடையாளமாக, தலைமைச் செயலர் கிரிஜா வைத்திய நாதனிடம், காகித கோப்புறைகளையும், நடிகர் விவேக்கிடம், துணிப்பை மற்றும் சணல் பைகளையும், அவர் வழங்கினார்.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, பாக்கு மட்டையில், தட்டு, கோப்பை போன்ற பொருட்களை தயாரிக்கும், ஐந்து தொழில் முனைவோர்களுக்கு, **21.35** லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் பன்னீர்செல்வம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கருப்பணன் பங்கேற்றனர். பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரத்தை துவக்கி, முதல்வர் பழனிசாமி பேசியதாவது: தூய்மையான தமிழகத்தை உருவாக்க, ஒருமுறை பயன்படுத்திய, பிளாஸ்டிக் பொருட்களை, முற்றிலும் தவிர்க்க வேண்டும். தடை செய்யப்பட்ட, பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக, மாற்று பொருட்களை, பொது மக்கள் பயன்படுத்தினால், சுகாதாரமான வாழ்க்கையை, நாம் அடைய முடியும்.

பிளாஸ்டிக் பொருட்களால், பொதுமக்களுக்கு பல்வேறு இன்னல்களும், சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. எனவே தான், அரசு, இந்த முடிவை எடுத்தது. இதற்கு, வியாபாரிகள், பொது மக்கள், முழுமையாக ஒத்துழைப்பு தரவேண்டும். பிளாஸ்டிக்கை முழுமையாக தடை செய்வதற்கு, விளம்பரத் தூதுவராக, நடிகர் விவேக், அவரோடு இணைந்து பணியாற்ற, நடிகர்கள் சூர்யா, கார்த்தி, நடிகை ஜோதிகா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

என்னிடம் வரும், அரசு கோப்புகளில் உள்ள, மேலுறைகள் கூட, இனிமேல், காகிதத்தினாலானதாக இருக்கும். அனைத்து அமைச்சர்களும், இன்று முதல், அதையே பயன்படுத்த உள்ளனர். இவ்வாறு முதல்வர் பேசினார்.

– இர்வின்

# விவசாயிகள் தற்கொலையில் எட்டாவது இடத்தில் தமிழகம்

நாட்டில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கையானது தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. விவசாயிகளின் தற்கொலை சம்பவங்களைத் தடுக்க மத்திய அரசு சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இருந்த போதிலும், விவசாயக் கடன், இயற்கை பேரிடர் உள்ளிட்ட காரணங்களால் நாட்டில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த *2013-ம்* ஆண்டு முதல் *2015-ம்* ஆண்டு வரை *11,441* விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். அதில், மகாராஷ்டிரா மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து, கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன



கர்நாடகாவில் *3,740* விவசாயிகள், மத்தியப் பிரதேசத்தில் *3,578* விவசாயிகள், ஆந்திரப்பிரதேசத்தில் *3,562* விவசாயிகள், தெலங்கானாவில் *2,747* விவசாயிகள், கேரளாவில் *1,989* விவசாயிகள் என உயிரிழந்துள்ளனர். இந்தப் பட்டியலில், தமிழகமும் இடம் பெற்றுள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தைத் தொடர்ந்து எட்டாவது இடத்தில் தமிழகம் உள்ளது. *2013-2015* வரை தமிழகத்தில் *1,606* விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாகப் பதிவாகியுள்ளது. தமிழகத்தைத் தொடர்ந்து, குஜராத், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், பீகார் மற்றும் கோவா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

– அகிலாண்டேஸ்வரி


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

**மக்கள் விசாரணை**

மக்களின் மனக்குமுறல்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-7 செப்டம்பர்-2018 இதழ்-4

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.,

**ஆசிரியர் குழு**
V.அருணாச்சலம், A.C.குமார்

**நிர்வாக ஆசிரியர்**
வீ.சிவசங்கரன், B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன், P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி, V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, அனந்த கிருஷ்ணன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், M.சத்தியராஜ் நாமக்கல், A.பாலகிருஷ்ணன், K.செந்தில்குமார் கோவை, R.ஜெயா, K.ஷமீம் ஷகிலா தென்சென்னை, P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, நாகராஜ் மூணாறு, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை, சுசீ ஈஸ்வர் தென்காசி, ராமசுப்பிரமணியன் ராஜபாளையம், சிலம்பரசன் தர்மபுரி, வெங்கடேசன் தி.மலை, S.ரமேஷ்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன் P.ஏழுமலை M.நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஆரணி ஏழுமலை, சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், N.குப்புசாமி, நீலகண்டன், N.சீனிவாசன், M.முருகன், G.ஆனந்த்குமார், D.ராஜேஷ், கிஷோர், முரளி

**சட்ட ஆலோசகர்கள்**
M.குணசீலன் B.Com., M.L.,
M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : M.சந்தோஷ்சிவன்

இதழ் வடிவமைப்பு: ஆப்பிள் பிரிண்டர்ஸ்

ஆலுவலகம் :

**மக்கள் விசாரணை**

எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600078.

E-mail: writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com

Website: www.makkalvisaranai.com

Contact: 93821 33334, 044 - 4861 5321



# இந்தியாவின் வள

அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள், நமது சுதந்திர இந்தியாவின் 10வது பிரதம மந்திரி ஆவார். நான்கு தசாப்தங்களாக சட்டமன்ற உறுப்பினராக இருந்த அவர், 3 முறை பிரதம மந்திரி பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களவைக்கு 9 முறையும், மாநிலங்களவைக்கு 2 முறையும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், முன்னாள் ஜன சங்கம் அரசியல் கட்சியை நிறுவினார். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த அவர், பாரதிய ஜனதா கட்சியின் ஆணிவேரென்று அக்கட்சி உறுப்பினர்களால் அழைக்கப்படுகிறார்.

இந்தியாவின் மிக உயரிய விருதான 'பத்ம விபூஷன்' விருதை வென்ற அவர், ஒரு சிறந்த கவிஞரும் கூட. அவர், 'ட்வென்டி-ஒன் போயம்ஸ்', 'க்யா கோயா க்யா பாயா: அடல் பிஹாரி வாஜ்பாய், வ்யக்தித்வா அவுர் கவிதம்', 'மேரி இக்யாவனா கவிதம்', 'ஸ்ரேஷ்ட கபிதா', எனப் பல கவிதைத் தொகுப்புகளை எழுதியுள்ளார். 'லோகமான்ய திலகர் விருது', 'சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் விருது', 'பாரத ரத்னா பண்டிட் கோவிந்த் வல்லப பந்த் விருது' எனப் பல விருதுகளை வென்றுள்ளார்.

பிரிட்டிஷ் இந்தியாவின் (இப்போது மத்திய பிரதேசத்தில் உள்ளது) என்னும் இடத்தில், கிருஷ்ணா பிஹாரி வாஜ்பாய் மற்றும் கிருஷ்ணா தேவி தம்பதியருக்கு மகனாக ஒரு நடுத்தர வர்க்க பிராமண குடும்பத்தில், டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி, 1924 ஆம் ஆண்டில் பிறந்தார். அவரது தந்தை ஒரு கவிஞர் மற்றும் பள்ளி ஆசிரியர் ஆவார்.

குவாலியரில் இருக்கும் கோர்கியில் உள்ள சரஸ்வதி ஷிஷு மந்திரில் தனது பள்ளிப்படிப்பை வெற்றிகரமாக முடித்த பின்னர், குவாலியர் விக்டோரியா கல்லூரியில் (இப்போதைய லக்ஷ்மி பாய் கல்லூரி) சேர்ந்தார். ஆரம்பத்தில் இருந்து படிப்பில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்த அவர், தனது கல்லூரியில் ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதத்தில் அதிகமதிப்பெண்கள் வித்தியாசத்தில் தேர்ச்சிப் பெற்று, இளங்கலைப் பட்டம் வென்றார். பிறகு, கான்பூரில் உள்ள டிஏவி கல்லூரியில் சேர்ந்த அவர், அரசியலில் முதுகலைப் (எம். ஏ) பட்டத்தையும் முதல் வகுப்பில் தேர்ச்சியுற்று பெற்றார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக் கத்தில், தனது மூத்த சகோதரரான பிரேம் என்பவருடன் கைதாகி சிறை சென்ற அவர், 23 நாட்கள் கழித்து விடுதலையானார். ஆர். எஸ். எஸ். சின் ஒரு அமைப்பான 'பாரதிய ஜன சங்' -ன் ஒரு பகுதியாக மாறிய அவர், அதன் தலைவரான ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்ததன் பேரில், கைது செய்யப்பட்டார். சிறையிலே முகர்ஜி அவர்கள் மரணமடைந்ததால், அவர் 1957ல் பல்ராம்பூர் தொகுதியிலிருந்து.

1996ல் நடந்த பொதுத் தேர்தலில், பி.ஜே.பி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்ததால், அப்போதைய பிரதமரான ஷங்கர் தயால் ஷர்மா அவர்கள், அவரைப் பிரதமராகப் பொறுப்பேற்க சொன்னார். இந்தியாவின் 11வது பிரதரமராகப் பதவியேற்ற அவர், மற்ற கட்சிகளின் ஆதரவு கிடைக்காததால், பதவியேற்ற 13 நாட்கள் கழித்து, பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, அக்கட்சிக் கலைக்கப்பட்டதால், மறுபடியும் தேர்தல் நடந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியை அமைக்கும் விதமாக, அவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 13 மாதங்கள் கழித்து, அனைத்திந்திய

# ர்ச்சி நாயகன் கடந்து வந்த பாதை

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தனது ஆதரவைப் பின் வாங்கியதால், அடுத்தத் தேர்தல் நடக்கும் வரை அவர் பிரதமர் பதவியில் இருந்தார். இதற்கிடையில், காஷ்மீர் பிரச் சனைக்குத் தீர்வு காணும் விதமாக, இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக் கிடையே சுமூகமான முடிவை அமலாக்க புதிய சமாதான முன்னெடுப் புகளை வரைந்தார்.

1999 ஆம் ஆண்டில் இந்தியா-பாகிஸ்தானுக்கிடையே நடந்த 'கார்கில்' போரில் இந்திய ராணுவம் 'ஆபரேஷன் விஜய்' என்ற செயல்பாட்டை செயல்படுத்தி, பாகிஸ்தான் ராணுவத்திற்குப் பெரும் சேதத்தை ஏற்படுத் தியதால், அப்போதைய பாகிஸ்தான் பிரதமரான நவாஸ் ஷெரிப் போரை நிறுத்தும்படி கேட்டுக்கொண்டார். கார்கில் போரில் வெற்றிப் பெற்றது, அவர்களின் தலைமையை மிகவும் தைரியமான மற்றும் வலுவானத் தலைமை என்று நாடு முழுவதும் போற்றச்செய்தது. இந்த வெற்றியை நினைவில் நிறுத்தும்படியாக, ஜூலை மாதம் 26 ஆம் தேதி, 2012 ஆம் ஆண்டில், 'கார்கில் விஜய் திவஸ்' என நியமிக்கப்பட்ட அவருக்கு, பா.ஜ. க தலைவர் நிதின் கத்காரி அவர்கள், மும்பையில் ஒரு மெழுகு சிலையைத் திறந்து வைத்தார்.

கார்கில் போரில் மிகத் திறமையாக செயல்பட்டதால், 1999 ஆம் ஆண்டில், நடந்த பொதுத் தேர்தலில், பா. ஜ. க 303 இடங்களில் அதிக வாக்குகள் வெற்றிபெற்று, அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி, 1999 ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாகப் பிரதமர் பதவியை ஏற்கச் செய்தது. மூன்றாவது முறை அவர், பிரதமராகப் பதவியேற்ற பின்னர், காத்மண்டு மற்றும் டெல்லிக்கிடையே செல்லும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானக் கடத்தல், 2001ல் பாராளுமன்றம் மீது தாக்குதல், 2002ல் குஜராத் வன்முறை, போன்ற பல பிரச்சனைகள் 2004ல் நடந்த பொதுத் தேர்தலில், பா. ஜ. க கட்சியைப் பெரும் தோல்வியை சந்திக்க செய்தது.

1992 - இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பத்ம விபூஷன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1993 - கான்பூர் பல்கலைக் கழகத்தில் இருந்து 'இலக்கியத்தில் டாக்டர் பட்டம்' பெற்றார். 1994 - 'லோகமான்ய திலகர் விருது' 1994 - 'சிறந்த பாராளுமன்ற உறுப்பினர் விருது' வழங்கப்பட்டது. 1994 - 'பாரத் ரத்னா பண்டிட் கோவிந்த் வல்லப பந்த் விருது' பெற்றார்.



அவருக்கு இலக்கியத்தின் மீது மிகுந்த ஆர்வம் இருந்தது எனலாம். இதனால், அவர் ஒரு எழுத்தாளராக உருவெடுத்தார். தனது சுயசரிதையை எழுதிய தோடு மட்டு மல்லாமல், 'ட்வென்டி-ஒன் போயம்ஸ்', 'க்யா கோயா க்யா பாயா: அடல் பிஹாரி வாஜ்பாய், வ்யக்தித்வா அவுர் கவிதம்', 'மேரி இக்யாவனா கவிதம்', 'ஸ்ரேஷ்ட கபிதா', எனப் பல கவிதைத் தொகுப்புகளை படைத்துள்ளார்.

– ரஜேந்திரன்

# ஆக்கிரமிப்பாலும், அலட்சியத்தாலும் இயற்கையிடம் தோற்கலாமா?

சென்ற ஒரே மாதத்தில் இருமுறை காவிரியிடம் தோற்று கொள்ளிடத்தில் தஞ்சமடைந்தது காவிரிப் படுகை. கொள்ளிடமே இல்லையென்றால் என்ன நடந்திருக்கும்? மழை என்று வானத்திலிருந்து துளிகூட விழாமல் கல்லணைக்குக் கீழே உள்ள காவிரிப் படுகை புதிரான வெள்ளம் ஒன்றில் மிதந்திருக்கும். காவிரித் தண்ணீரை கொள்ளிடத்துக்குத் திருப்பினால் அது வெள்ளம். அதையே காவிரியில் திறந்தால் பாசன நீர். முக்கொம்பிலிருக்கும் மேலணை இப்படி காவிரி நீருக்கு அடையாளம் சொல்லிப் பிரித்து அனுப்பும். கொள்ளிடம் ஒரு வடிகால். ஒரு மாதமாகக் காவிரியைக் கொள்ளிடத்தின் துணை வடிகாலாக மாற்றியிருக்கிறோம்.

வெள்ளத்தைப் பிடித்துவைக்க முடியாது. இருந்தாலும், கடைமடைக்குத் தண்ணீர் எட்டாத போது கொள்ளிடத்துக்கு அதையே வெள்ள மென்று அனுப்புவது தோல்விதான். ஆகஸ்ட் மாத இறுதிக்குள் தண்ணீர் திறக்க வாய்ப்பு இல்லை என்ற அனுமானம் ஒன்றில் நிர்வாகம் நிரந்தரமாக உறைந்துவிட்டது. வழக்கமாக, ஜூன் 12 தண்ணீர் திறப்பார்கள். அதைத் தாண்டி, ஜூலை, ஆகஸ்ட் வரை செல்லும் பல பராமரிப்பு, கட்டுமான வேலைகள் காவிரியின் போக்கில் நடந்துகொண்டிருந்தன. அணை திறந்தபோது இதனால் சில ஆறுகளில் தண்ணீர் திறக்க முடியவில்லை.

சிலவற்றில் தாமதித்துத் திறந்தார்கள். ஜூன் 12-க்குப் பிறகு முடியும் வேலைகளுக்கு அனுமதி தருவது காவிரிப் படுகைக்கு ஏற்றதல்ல என்பதை நமக்கு வெள்ளம் வந்துதான் சொல்லித்தர வேண்டுமா? 'வா' என்றால் வராது காவிரி. 'இரு' என்றால் அணையில் இருக்காது. போகும்போது நம் சொல்லுக்காகக் காத்திருக்காது. தன் போக்குக்குப் போகும் உயிர்ப்பு அதற்கு உண்டு. இந்த உயிர்ப்பையும் நீர்மேலாண்மைக்கு ஒரு ஆதார அனுமானமாகக் கொள்ள நாம் பழக வேண்டும். செப்டம்பர் வரை வெள்ளம் வர வாய்ப்பு உண்டு. ஆனால், தண்ணீர் வராது என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஏற்கெனவே எழுபது, எண்பது அடி நீர் இருந்தாலும் மேட்டூர் அணையை மூடித்தான் வைத்திருப்போம்.

வெள்ளம் வந்தது. அவசரமாக அணையைத் திறந்தார்கள். "இன்னும் இருபது நாள் கழித்துத் திறக்க வேண்டும் அல்லது ஒரு மாதத்துக்கு முன்பே திறந்திருக்க வேண்டும்" என்றார்கள் விவசாயிகள். நீர் மேலாண்மைக்கு அடிப்படையாக நிர்வாகம் வைத்துக்கொண்டிருக்கும் எதிர்மறை அனுமானம் சரிதானா என்று அது இப்போது பார்க்க வேண்டும். மேட்டூர் அணையின் முழுக் கொள்ளளவை நாம் பயன்படுத்த முடிவதில்லை. 120 அடி உயரமுள்ள அணையில் கீழிருந்து இருபது அடி உயரத்துக்காவது வண்டல் படிந்திருக்கும். அந்த அளவுக்கு அணையின் கொள்ளளவும் குறையும்.

முழுக் கொள்ளளவுக்குத் தண்ணீரை வாங்கிக் கொள்ளும் நிலையில் ஆறுகள் இல்லை. 24 ஆயிரம் கன அடிக்கு மேல் தண்ணீரை வாங்கும் அமைப்பில் 22 ஆயிரம் கன அடிக்கு மேல் திறப்பதற்குத் தயங்குகிறார்கள். வெண்ணாற்றில் 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து அதன் கிளையான வெட்டாறு உடைத்துக்கொள்ளுமோ என்று எட்டிப்பார்க்கிறார்கள்.

தண்ணீர் திறந்தபோதே தஞ்சாவூருக்கு மேற்கில் கல்லணைக் கால்வாய் உடைப்பெடுத்தது. 4 லட்சம் கன அடி வெள்ளத்தை வாங்கும் கொள்ளிடம் 2 லட்சத்துக்குக் கொஞ்சம் கூடுதலாக வரும்போதே அதன் கரை பஞ்சையாகி, தண்ணீரும் ஊரைச் சூழ்ந்துகொண்டது. மணல் அற்றுப்போன ஆறுகள் கடலுக்கோ, கடைமடைக்கோ இயல்பான வேகத்தில் ஓட இயலாது.

வாய்க்காலிலும் ஏறிப் பாயாது. மேல்தண்ணீர் ஓடும் வேகத்துக்கு ஆற்றின் கீழ்த்தண்ணீர் ஓடாது. மணலோ தளம் பாவிய தரைபோல ஆற்றின் போக்குக்கு வேகத்தைத் தரும். மணல் இருந்தால் நீரை பூமி உறிஞ்சிக்கொள்ளத் தடுப்பணைகள் தேவையில்லை.

1980-களில் வேலைவாய்ப்பைப் பெருக்க பொருளாதார நிபுணர்கள் கட்டுமானத் தொழிலை ஊக்குவித்தார்கள். அப்போதிருந்து ஒரு மணல் சந்தை உருவாகித் தழைத்தது. அது ஒரு காரணத்தின் விளைவாகி, அந்த விளைவே மற்றொரு விளைவுக்குக் காரணமாகி தொடராக நீண்டு கொண்டிருக்கிறது. மனித நாகரிகத்தின் இந்த மாற்றத்தில் காவிரியும் சிக்கியது. அருகிலேயே ஆறு ஓடினாலும் குளங்கள் வறண்டு கிடக்கின்றன. ஆக்கிரமிப்பாலும், அலட்சியத்தாலும் தூர்ந்து போன வாய்க்கால் எப்படி குளத்துக்குக் காவிரி நீரைக் கொண்டுவரும்? சமுதாய விளிம்பில் இருக்கும் மக்களை ஆறு, குளங்களின் விளிம்புக்குத் தள்ளிவிடும் கலாச்சாரத்தில் காவிரி மட்டும் எப்படித் தப்பும்?

விவசாயம், பாசன அமைப்பெல்லாம் மனித நாகரிகம் என்ற நதியின் மூலம். ஆற்றில் வெள்ளமே வந்தாலும் வாய்க்காலும், குளமும் வற்றித்தான் கிடக்குமென்றால் அது கலாச்சாரக் குறை. நம் வாழ்க்கை முறையின் குறை. வெள்ளத்தின் வேகத்தை நீரின் ஓட்டமாகத் தணித்து வேண்டிய இடத்துக்கு அதைக் கொண்டுபோகவில்லை. இதை நிர்வாகக் குறை என்று சொல்லலாம். அதையும் கலாச்சாரக் குறையின் அங்கமாக வைத்து விரிவான பின்னணியில் பேச வேண்டும்.

ஆறு, பாசனம் என்ற அடிப்படையில் இயங்கிய கலாச்சாரம் இன்று வேறு ஒரு அடிப்படையில் இயங்கலாம். இவையெல்லாம் இப்போது நிர்வாகத்தின் முதல் கவலைகளாக இருக்காது. இந்த நூதன கலாச்சாரத்தில் ஆறும், அதன் பராமரிப்பும் முக்கிய அங்கமல்ல. அநேகமாக அப்போதைக்கு அப்போது நிவாரணமும், ஊக்கத்தொகையும் புது நிர்வாகக் கலாச்சாரத்தின் நிரந்தர அக்கறைகளாகலாம். நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமையில் காவிரியும், கிராமமும், விவசாயமும் கீழிறங்கியிருக்கலாம்.

காவிரியில் வந்த வெள்ளம் பழைய மையத்திலிருந்து நம் கலாச்சாரம் விலகியிருப்பதைச் சொல்லிவிட்டது. இனி வரும் வெள்ளங்கள் பயன்பட வேண்டுமானால் நம் கலாச்சாரம் ஒரு மாற்று மையத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். அந்த அக்கறை இல்லையென்றால் என்ன நடக்கும்? காவிரி வழக்கில் நாம் கர்நாடகத்தை ஒருமுறை வென்றிருக்கலாம். ஆனால், காவிரியிடம் தொடர்ந்து தோற்றுக்கொண்டிருப்போம்!

- ஆ.மவுரியன்





நாட்டின் பெரும்பாலான மக்கள், மருத்துவ சிகிச்சைகளுக்காகத் தங்கள் வாழ்நாள் சேமிப்பையே செலவழிக்க வேண்டியிருக்கும் இன்றைய சூழலில், 'தேசிய சுகாதாரப் பாதுகாப்பு இயக்கம்' (என்எச்பிஎம்) செப்டம்பர் 25 முதல் முறைப்படி தொடங்கிவைக்கப்படும் என்று சுதந்திர தின உரையில் அறிவித்திருக்கிறார் பிரதமர் மோடி. 10 கோடி ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு, குடும்பத்துக்குத் தலா அதிகபட்சம் ரூ. 5 லட்சம் வரையிலான மருத்துவச் செலவை அரசு ஏற்கவிருக்கிறது. உலகின் மிகப் பெரிய சுகாதாரத் திட்டம் என்று அழைக்கப்படும் திட்டம் இது.

இந்தத் திட்டத்தின் கீழ் நாடெங்கும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் எவ்வித ரொக்கப் பரிமாற்றமும் செய்யாமல் மக்கள் சிகிச்சை பெற இயலும். சமூக, பொருளாதார, சாதி அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் பயனாளர்கள் தேர்வுசெய்யப்பட உள்ளனர். மாநில அரசுகள் தங்களுடைய முகமை மூலம் அமல் செய்யவிருக்கின்றன. மாவட்ட, வட்டத் தலைநகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவை போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், பயிற்சி பெற்ற இதர உதவியாளர்கள், கருவிகள், மருந்து-மாத்திரைகள், அடித்தளக் கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் பற்றாக்குறையாகவே இருக்கின்றன. மாநில அரசுகள் குறைகளைக் களைந்து, நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும். சிகிச்சைச் செலவுகள் வெளிப்படையாக விவாதிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்ப வலையமைப்புகள் மிகுந்த கவனத்துடன், விரிவாகச் செய்யப்பட வேண்டும்.

இந்த இயக்கம் வெற்றிபெற வேண்டுமென்றால், ஒவ்வொரு மாநில

# தேசிய சுகாதார இயக்கத்தினால்
# ஏழை மக்கள்
# பயனடைவார்களா?

அரசும் அதன் பட்ஜெட் தொகையில் 8% அல்லது மொத்த தேசிய உற்பத்தி மதிப்பில் (ஜிடிபி) 2.5% அளவுக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும். அதேசமயம் புதிய திட்டத்துக்குத் தேவைப்படும் மருத்துவ ஊழியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களை வேலைக்குச் சேர்ப்பதும் பயிற்சியளிப்பதும் மனிதவள மேம்பாட்டுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும். சுகாதாரச் செலவுகள் குறைய வேண்டும் என்றால், அரசுத் துறையில் மருத்துவமனைகளையும் மருத்துவக் கல்லூரிகளையும் அதிகப்படுத்த வேண்டும். தனியார் அமைப்புகள் மூலம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதும் தனியார் மருத்துவமனைகள் மூலம் சிகிச்சை அளிப்பதும் குறுகிய காலத்துக்கு மட்டும்தான் மேற்கொள்ள முடியும். இந்தத் திட்டம் தொடர்பான புகார்களைப் பெறவும் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் தலைமைக் கண்காணிப்பு அமைப்பு வேண்டும். குடும்ப வருவாய் என்னவென்று பாராமல் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் சிகிச்சை தர வேண்டும். புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவும் திட்டத்தில் இடம்பெற வேண்டும். இந்தத் திட்டத்தை முனைப்புடன் அமல்படுத்துவதன் மூலம், சிகிச்சைக்குப் பணமில்லாமல் அல்லாடும் பல குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற முடியும். நல்லது நடக்கட்டும்!

- V.அருணாசலம்


## நிருபர்கள் தேவை

பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை * அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**



ஆ.மவுரியன்



⑪ வீர தமிழச்சிகளின் வரலாறு..!

# அஞ்சலையம்மாள்

**தமிழ்நாட்டில் முதன் முதலில் சத்தியாகிரகத்தில் சிறை புகுந்த பெண்**

**தன்னுடைய 9வது வயதில் நீலன் என்ற கொடுங்கோலன் சிலையை அகற்றுவதற்காக தாயுடன் சென்னை வந்து போராட்டத்தில் ஈடுபட்டார். இவர்களுடன் தந்தையும் போராடும் போது அனைவரும் கைது செய்யப்பட்டு லீலாவதி செனனி சிறுமியர் இல்லத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிடுகிறார். 1931ல் விடுதலையான பிறகு காந்தியின் வார்தா ஆசிரமத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்து சேவையில் ஈடுபட்டார்.**

இவருடைய கணவர் திரு.ஜமதக்னி வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கத்தில் உள்ள கடப்பேரி என்ற சிற்றூரில் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தவர். காந்தியடிகளில் முதல் இயக்கம் முதல் இறுதி இயக்கம் வரையில் எல்லாவற்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ஒன்பது ஆண்டுகள் சிறையில் கழித்தவர். தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் போன்றவற்றில் புலமை பெற்று பல விருதுகளை குவித்தவர்.

ஜமதக்னி அவர்களின் நாட்டுடைமை யாக்கப்பட்ட நூல்களைப் பற்றி ஆர்வியின் தளத்தில் காணலாம். இவர்களுடைய புதல்வி திருமதி.சாந்தி பெரியார் சிந்தனையில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்று சென்னையில் வசிக்கிறார். ஆக, இவ்வளவு தியாகங்கள் செய்த குடும்பம் வரலாற்று ஏடுகளில் எங்கே உள்ளது? இந்த சரித்திர சுவடுகள் பெண்களை ஒதுக்கி வைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் தென்மாவட்டத்தில் சுதந்திர போராட்டத்திற்கு பங்களித்த எத்தனை பெண்கள் உடனே நம் நினைவுக்கு வருகின்றனர்? பெண்களின் போராட்டங்களை இந்த சமூகம் மறைக்கிறது அல்லது மறக்கிறது!

சிறையில் அடைபட்டிருக்கும் போது கடலூரில் அஞ்சலை அம்மாளின் வீடு ஏலத்திற்கு வந்தபோது, ஒரு முஸ்லீம் குடும்ப நண்பர் சமயத்தில் உதவி செய்கிறார். அஞ்சலை அம்மாளின் குழந்தைகளை சரியாக படிக்க வைக்க முடியவில்லை. பொருளாதார பிரச்சினை ஒரு புறம், பாதுகாப்பின்மை ஒரு புறம் - அதன் தாக்கம் அந்த குடும்பத்தின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் தொடர்கிறது.

அரசர்களுக்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்குமே சரித்திரம் சொந்தமானது என்றால் சாதாரண அஞ்சலை அம்மாக்களின் தியாகத்தை யார் சொல்வது? யார் இதை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துரைப்பது? யார் யாருக்கோ சிலை நிறுவும் அரசாங்கம்

அவர்களை எப்படி மறக்கலாம்?இவர்கள் சாதி, மதங்கள் தாண்டி வெளியில் வந்து போராடியவர்கள் ஆயிற்றே! History என்பது his-story மட்டுமல்ல her-story யையும் உள்ளடக்கியது தானே! அரசு செய்ய மறந்தால் அல்லது மறுத்தால் இந்த சமுதாயமாவது அன்னாருக்கு சிலையெடுத்து சரித்திரத்தை திரும்பி பார்க்க வைக்கட்டும்!

**"போற்றித்தாய்" என்று தாளங்கள் கொட்டடா!**
**"போற்றித்தாய்" என்று பொற்குழலூதடா!!**

அஞ்சலை அம்மாள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறை சென்றவர். இவர் குடும்பமே விடுதலைப் போரில் ஈடுபட்டது. 1931ல் உப்புச் சத்தியாக்கிரகம்,



1940ல் தனி நபர் சத்தியாக்கிரகம் ஆகிய வற்றில் ஈடுபட்டவர். சென்னையில் தடை விதிக்கப்பட்ட காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பெண் படையுடன் கைதானவர். சுதந்திரத்திற்குப் பின் ஜில்லா போர்டு உறுப்பினராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

**"நேற்று என் தந்தை தோண்டினார்**
**நீரும், எண்ணெயும் தந்தது இப்பூமி!**
**இன்று நான் தோண்டுகிறேன்**
**அங்கங்கே வெடிகுண்டுகளும்**
**கிடைக்கின்றன!**
**நாளை என் மகன் தோண்டினால்**
**எங்கும் எலும்புக்கூடுகள்தான்**
**இருக்குமோ?"**

இதுமாதிரி நாட்டுநிலைமையை நச்சென்று பேசும் கவிதைகள் நாம் முயலாவிடினும் மனதில் பதிந்துவிடுகின்றன. தீவிரவாதம் இப்படியே தொடர்ந்தால் நாளை நாடு இந்தக் கவிதையின் கடைசி வரி சொல்வது போல்தான் இருக்கும். வன்முறையை வளர்ப் பதில் அரசியல் கட்சிகளுக்கும் கணிசமான பங்குண்டு இப்போது. இது தவிரவும் சில வேடிக்கைகள். அண்மையில் வெற்றிபெற்றி ருக்கும் சேதுசமுத்திரத் திட்டத்திற்கு "நாங்களே காரணம்" என்று கட்சிகளுக்குள் நடக்கும் கூத்துகளைப் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். நாட்டு விடுதலைக்காகக் குடும்பத்துடன் சிறைக்குப் போனவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது இன்றைய தலை வர்களை எண்ணி வருந்தாமல் இருக்க முடியாது.

கடலூர் அஞ்சலையம்மாள் தன் கணவர், மகள், மருமகன் எனத் தன்னோடு சேர்த்து தன் குடும்பத்திலிருந்து நான்கு பேருடன் இந்திய விடுதலைக்குப் பங்காற்றியவர். 1890ல் பிறந்து 1961 வரை வாழ்ந்த இவர், சுதந்திரப் போராட்டத்தில் தென்னாட்டிலிருந்து ஈடுபட்ட முதல் பெண்மணி ஆவார். 1927ல் நீலன் சிலை அகற்றும் போராட்டம், 1937ல் உப்புக் காய்ச்சும் போராட்டம், 1933ல் மறியல் போராட்டம், 1940ல் தனிநபர் அறப் போராட்டம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் பல்வேறு போராட் டங்களிலும் ஈடுபட்டு பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர் அசலையம்மாள். கடலூர், வேலூர், திருச்சி, பெல்லாரி சிறைகளில் இருந்தவர். கருவுற்றது முதல் பேறு காலம் வரை பெண்களைக் கண்க ளுக்குள் வைத்துக் காப்பாற்றும் வழக்கம் நம்மிடையே உண்டு.

தொடரும்

# தேவைப்படும் தண்ணீரை நேரடியாக வழங்கும் பொறுப்பை விவசாயிகளே ஏற்க வேண்டும்

மேட்டூர் அணையின் 85 ஆண்டுக்கால வரலாற்றில்39-வது முறையாக 2018-ல் நிரம்பியிருக்கிறது. கனமழை தொடர்வதால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து தொடர்ந்து நீரை வெளியேற்றுகிறது கர்நாடகம். இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு காவிரியில் வெள்ளம் பாய்கிறது. நல்ல சம்பா சாகுபடி காணலாம் என்று விவசாயிகள் நம்பிக்கையோடு பேசுகின்றனர். ஆனால், இப்படி காவிரி ஆண்டுதோறும் கரைபுரண்டு ஓடுவது சாத்தியமில்லை என்பதை பருவநிலை நிபுணர்கள் எச்சரித்து விட்டனர்.

நல்ல பருவமழைக் காலத்திலும்கூட தண்ணீர் பற்றாக்குறைக்கு ஆளாகிறது தமிழகம். பருவ நிலை மாறுதலையும் தவிர்த்து வேறு காரணங் களும் உண்டு என்பதையே இந்தப் பற்றாக் குறை உணர்த்துகிறது. தண்ணீர் பற்றாக் குறைக்கான காரணங்களை நாம் கவனிப்ப தில்லை அல்லது அக்கறை காட்டுவதில்லை. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகமாக இருக்கும் காலங்களில் ஆற்றங் கரைகளிலும் கால்வாய்களிலும் உடைப்பு எடுத்துத் தண்ணீர் வயல்களிலும் ஊருக் குள்ளும் பாய்கிறது, அல்லது பெருமளவு கடலில் கலக்கிறது. இதே போன்ற ஒரு சம்பவம் காரணமாகச் சில நாட்களுக்கு முன்னால் கல்லணைக் கால்வாயிலிருந்து தண்ணீர் வெளியேறுவது நிறுத்தப்பட்டது.

ஒரு டிஎம்சி தண்ணீரைக் கொண்டு 50 கோடி ரூபாய் மதிப்புக்கு நெல்லைச் சாகுபடி செய்யலாம் என்னும்போது 17 டிஎம்சி தண்ணீர் கடலில் கலப்பது பெரிய இழப்பாகும். பருவநிலை மாறுதல் இதற்கு எந்தவிதத்திலும் காரணம் இல்லை. இந்தியாவில் உள்ள மிகப் பெரிய அணை களில் மேட்டூரும் ஒன்று. சராசரியாக 24.71 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு அது பாசன நீரை அளிக்கிறது. காவிரி வடிநிலத்தில் 700 நீர்த்தேக்கங்களை அது நிரப்புகிறது. தமிழ் நாட்டில் சுமார் 41,127 ஏரிகள் உள்ளன. குடிமராமத்து முறைகைவிடப்பட்டதிலிருந்து ஏரிகளைப் பராமரிப்பது நின்றுபோனது. இந்த ஏரிகள் பெரும்பாலும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன. தூர்வாராமல் வண்டல் படிந்து



மண்மேடுகள் உயர்ந்துவிட்டன. ஏரிக்கு நீர் வரும் வாய்க்கால்களும் நீரை வெளியேற்றும் வாய்க்கால்களும் வீடுகள் உள்ளிட்ட ஆக்கிர மிப்புகளால் அழிந்துவிட்டன.

மேட்டூர் அணையிலிருந்து கல்லணை வரையிலான பாசன வாய்க்கால்களில் பெரும ளவுக்குத் தூர் வாரப்படாமல் புதர் மண்டியும் களைச் செடிகள் வளர்ந்தும் தண்ணீர் பாய முடியாமல் தடுக்கப்பட்டது. 1950-51-ல் பாசன வாய்க்கால்களால் சாகுபடி நடந்த பரப்பு 7.88 லட்சம் ஹெக்டேராக இருந்தது, 2015-16-ல் 6.72 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துவிட்டது. ஏரிகளையும் வாய்க்கால் களையும் தொடர்ந்து பராமரித்துவந்தால் ஏரிகளில் முழுக் கொள்ளளவுக்கு நீரை நிரப்புவதுடன் வாய்க்கால்களிலும் உபரி நீரைச் சேமித்திருக்க முடியும். அத்துடன் கடைமடைப் பகுதிகளுக்கும் தண்ணீர் உடன டியாகப் பாய்ந்திருக்கும். காவிரி நீரோ - மழை நீரோ இனி ஒவ்வொரு துளியும் சாகுபடிக்கே பயன்பட வேண்டும். காவிரி,

கொள்ளிடம் ஆகிய இரு ஆறுகளின் மீதும் தமிழ்நாட்டில் புதிய தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் இது மிக முக்கியம். தடுப்பணைகள் மழைக் காலத்தில் தண்ணீரைத் தேக்கவும், மழைக் காலத்துக்குப் பிறகு சாகுபடிக்குப் பயன்ப டுத்தவும் உதவும். அதே நேரம் நிலத்தடி நீர்மட்டமும் உயரும். தமிழ்நாட்டைப் போலவே தண்ணீர் பற்றாக்குறையால் அவதிப்பட்ட குஜராத் மாநிலம் தடுப்பணை களைக் கட்டி நிலத்தடி நீர்மட்டத்தைக் கணிசமாக உயர்த்தியிருக்கிறது.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆறுகளின் 'நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம்' கொண்டு வரப்பட்டது. அதன் ஒரு பகுதியாக ஆறுகளின் வாய்க்கால்களைச் சீரமைத்து மிகுந்த திறமை யாகப் பயன்படுத்தும் வழிமுறையும் இடம் பெற்றிருந்தது. தண்ணீரைச் சேமித்து, பல வழிகளிலும் நீர்வள மேலாண்மையை ஒருங் கிணைக்க வேண்டும். நீர் நிர்வாக மேலாண் மையில் முக்கியமானது, தண்ணீர் கிடைப்பதே அரிதாகிவிட்ட கடைமடைப் பகுதியில், தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களைச் சாகுபடி செய்யாமலிருப்பது. சொட்டுநீர், தெளிப்பு முறை பாசனங்களால் ஒவ்வொரு ஏக்கரிலும் 50% வரை தண்ணீரைச் சேமிக்க முடிகிறது. அத்துடன் அறுவடையும் கூடுகிறது.

நீர்நிலைகளை நிர்வகிக்க மாநில அரசையோ, உள்ளாட்சி மன்றங்களையோ விவசாயிகள் இனி நம்பியிருக்கக் கூடாது. பயனாளிகளுக்குத் தேவைப்படும் தண்ணீரை நேரடியாக வழங்கும் பொறுப்பை விவசாயிகளே ஏற்க வேண்டும். இதற்கா கத்தான் 'பங்கேற்பு பாசன வளர்ச்சி-மேலாண்மை அணுகுமுறை' கொண்டுவரப் பட்டுள்ளது. மகாராஷ்டிரத்தில் விவசாயி களைக் கொண்ட 'தண்ணீர் பயன்பாட்டுச் சங்கங்கள்' மிகச்சிறப்பாகச்செயல்படுகின்றன. தண்ணீரைச் சிக்கனமாகவும் திறமையாகவும் செலவழிக்கின்றனர். விவசாயிகளே நிர்வகிப் பதால் நிர்வாக, மேலாண்மைச் செலவுகளும் கிடையாது. ஆந்திரத்திலும் விவசாயிகளைக் கொண்ட பாசனநீர் மேலாண்மை அமைப்புகள் செயல்படுகின்றன. தமிழ் நாட்டிலும் சமுதாயம் சார்ந்த தண்ணீர் நிர்வாக மேலாண்மை வலுப்பட வேண்டும்.

போர்க்கால அடிப்படையில் இவற்றை நோக்கித் தமிழகம் நகராவிட்டால் ஒரே ஆண்டில் வெள்ளப் பெருக்கும் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத அவலமும் நம்மை வாட்டும். தண்ணீருக்காகக் குரல்கொடுப்ப தோடு நிற்காமல், இப்போதும் இனிவரும் காலங்களிலும் தண்ணீரை நாம் எப்படி காக்கப் போகிறோம், செலவழிக்கப் போகிறோம் என்பதில்தான் நம்முடைய இருப்பு, வளர்ச்சி எல்லாமே அமையப்போகிறது.

- V.சிவசங்கரன்



முதியவர்கள் முன் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினையே, 'சம்பாத்தியம்' இல்லை. தான் சம்பாதித்ததை எல்லாம், பிள்ளைகளின் படிப்பு, ஆரோக்கியம், நல்வாழ்வுக்காகச் செலவு செய்து விட்டு, முதிய வயதில், வருமானத்துக்கு வழியின்றி, தமது அடிப்படைத் தேவைகளுக்குக் கூட பிள்ளைகளை சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ள பெற்றோர்கள் ஏராளம்.

பிள்ளைகளும் ஆதரிக்காதபோது, தள்ளாத வயதில் ஒரு வேளை சாப்பாட்டுக்கும் மருத்துவ செலவுக்கும் என்னதான் செய்வார்கள்? யாரிடம் போய்க் கேட்பது? இந்தச் சிக்கலுக்கு விடை காணும் முயற்சிதான் அசாம் அரசின் 'பிரணாம்' சட்டம். இரு கரம் கூப்பி, சற்றே குனிந்து, பெரியவர்களுக்கு 'வணக்கம்' சொல்கிறோம் அல்லவா...? இதுதான் வட மொழியில், 'பிரணாம்' எனப்படுகிறது. வரும் அக்டோபர் 2-ம் தேதி, மகாத்மா காந்தி பிறந்த நாள் முதல், இச்சட்டம் அமலுக்கு வருகிறது.

மாநில அரசு ஊழியர்களை மட்டுமே கட்டுப்படுத்தும் இந்தச் சட்டம் நாளடைவில், பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். ஓய்வூதியம் அல்லது வருமானம் இல்லாத பெற்றோர், தம் பிள்ளை பணிபுரியும் துறையின் உள்ளூர் தலைமை அதிகாரி முன்பு கோரிக்கை வைக்க இந்தச் சட்டம் வழி வகுக்கிறது.

அவர், இரு பக்க நியாயங்களையும் கேட்டறிந்து, இறுதி முடிவு எடுப்பார். பெற்றோரின் கோரிக்கை நியாயமானதாக இருப்பின், பிள்ளைகளின் மாத சம்பளத்தில், 10 முதல் 15 சதவீதத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, பெற்றோரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

நாட்டிலேயே முதன் முறையாக அசாம் மாநிலத்தில்தான் இது அறிமுகம் ஆகிறது. இந்த நோக்கத்துக்காக, 'பிரணாம் ஆணையம்' அமைக்கப்படும். கூடுதல் முதன்மைச் செயலாளர்நிலையில் உள்ள ஒருவர், முதன்மை ஆணையராக நியமிக்கப்படுவார். இவருடன் சமூக சேவகர்கள் (அ) ஆணையர் நிலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள் இரண்டு பேரும், ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள். இந்த ஆணையம், ஒரு 'குவாஸி' நீதிமன்றம் போன்றது. அதாவது, நீதிமன்ற அதிகாரங்களுடன், முழுவதும் தன்னிச்சையாக செயல்படும் நிர்வாக அமைப்பு.

பிள்ளைகள் பணிபுரியும் அலுவலகத்தில், சம்பளம் வழங்கும் அலுவலரிடம் மனு கொடுத்தால் போதுமானது. ஒரு மாதத்துக்குள் அவர் முடிவு எடுக்க வேண்டும். தவறினால், அல்லது சரியான நிவாரணம் கிடைக்கவில்லை என்று கருதினால், அந்தத் துறையின் இயக்குநரிடம் முறையிடலாம். இதன் மீது அவர், 2 மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும்.

இங்கும் நியாயம் கிடைக்கவில்லை என்றால், 'பிரணாம்' ஆணையத்திடம்

# பெற்றோர்களின் நலனில் அக்கறை காட்டுமோ அரசு?

மேல்முறையீடு செய்யலாம். மூன்று மாதங்களுக்குள் ஆணையம், இறுதி முடிவை எடுத்தாக வேண்டும். இந்தச் சட்டத்தின் மூலம், சுமார் 4 லட்சம் பேர் (பெற்றோர்) உடனடியாக பலன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டம் (சட்டம்) காரணமாக, அரசுக்கு கூடுதல் நிதிச் சுமை எதுவும் இல்லை. சமூக நலத் திட்டங்களை வடிவமைப்போர் இதுபோலதான் சிந்திக்க வேண்டும். தனி நபர்கள் ஆற்ற வேண்டிய கடமைக்கு அவர்களையே பொறுப்பாக்குவதுதான் ஆரோக்கியமான வழிமுறை. இதை தமிழக அரசும் ஏன் இதனைப் பின்பற்றக் கூடாது? என்ற கேள்வி நம் மனதில் எழுகிறது. மிக அதிக எண்ணிக்கையில் அரசு ஊழியர்களைக் கொண்ட மாநிலம் தமிழகம். அதேபோல, பிள்ளைகளால் கைவிடப்படும் முதியோரின் எண்ணிக்கையும் மிகுந்துள்ள மாநிலம்.

எந்தவொரு சமூக நலத் திட்டமாக இருந்தாலும், அதை முன்னெடுப்பதில், முனைப்புடன் செயல்படுத்துவதில், தமிழ்நாடு எப்போதுமே முதலிடம் வகித்து வருகிறது. ஆகவே, தமிழக அரசும் உடனடியாக, 'பிரணாம்' சட்டத்தின் தமிழ் வடிவத்தைக் கொண்டு வந்து, முதியோர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி ஏற்றலாம். கல்வித் துறையில் பல நல்ல முயற்சிகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. முதியோர் நலன் சார்ந்த சட்டத்துக்கும் முன்னுரிமை தந்து நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும். ஆதரவற்ற முதியோருக்கு உதவும் இலவசத் திட்டம் ஏற்கெனவே இருக்கிறது. ஆனால் போதாது. காரணம், பல முதியவர்களின் தன்மானம், இலவச திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் தடுக்கிறது.

'பிரணாம்' சட்டம், இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தாம் வளர்த்த, தாம் மிகவும் நேசிக்கிற, பிள்ளைகளிடம் இருந்தே, வருமானம் பெற்றுத் தருகிறது; அவர்களின் கடமையை, ஒரு வகையில், சட்ட உரிமை ஆக்குகிறது. இதுதான் இந்தச் சட்டத்தின் ஆகப் பெரிய வெற்றி. தொழில் துறையில் நன்கு முன்னேறிய, தனியார் துறையில் கணிசமானோர் பணிபுரியும் மாநிலமாக நாம் உள்ளதால், அசாம் மாநிலம் போல் அல்லாது, தொடக்க நிலையிலேயே, பொதுத்துறை, தனியார் ஊழியர்களையும் உள்ளடக்கியதாக தமிழகச் சட்டம் அமையலாம்.

- ரமேஷ்குமார்





# சிந்தனை முத்துக்கள்



இந்த உலகில் ஏகப்பட்ட மனிதர்கள் அதீத பசியுடன் இருக்கிறார்கள்.
உணவை தவிர வேறு எந்த உருவத்தில் கடவுள் அவர்கள் முன் வந்தாலும் பயனில்லை..

- மகாத்மா காந்தி


## மரம் வளர்ப்போம்



கிளி வளர்த்தேன்
பறந்து விட்டது
அணில் வளர்த்தேன்
ஓடி விட்டது
மரம் வளர்த்தேன்
இரண்டும் திரும்பி
வந்து விட்டது

- அப்துல் கலாம்

மனைவியுடன் சண்டபோட்ட பின் பிரபல ரவுடி தற்கொலை -செய்தி




பொண்டாட்டிய சமாளிக்கிறதுல ரவுடிக்கே இந்த கதின்னா நம்ம நிலைமை எல்லாம் அவ்ளோதான்... 😟😟😟

**ஆசிரியர்:** இது யாரோட கையெழுத்து?"/\/\/\/\/\/\"

**பையன்:** என் அப்பாவோட கையெழுத்து ?

**ஆசிரியர்** :உன் அப்பா பெயர் என்ன ?

**பையன்** :ஏழுமலை.



மனிதன் நாசமா போக ஈசி வழி




எல்லோருடைய வாழ்க்கையும் ஒரு மெழுகுவர்த்தி போலதான். தூரத்தில் இருந்து பார்த்தால் ஒளி மட்டும் தெரியும். அருகில் சென்று பாருங்கள் அவர்கள் உருகி கண்ணீர் வடிப்பது தெரியும்.

## "தமிழ்" வாழ வைக்கும்

விதவை என்று எழுதுகிறேன், எழுத்தில் கூட பொட்டு வைக்க முடியவில்லை. சமுதாயம் மட்டுமல்ல, மொழிகூட பெண்களை வஞ் சித்துவிட்டது..

விதவை என்பது வடமொழிச்சொல், தமிழில் "கைம்பெண்" என்று எழுதினால் ஒன்றுக்கு இரண்டு பொட்டு வைக்கலாம். தமிழ் வஞ்சிக்காது வாழ வைக்கும்...

" வியர்வைத் துளிகளும் கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம ஆனால் அவைதான் வாழ்வை இனிமையாக மாற்றும் "



எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
பாதையெல்லாம் மாறிவரும்
பயணம் முடிந்துவிடும்
மாறுவதைப் புரிந்து கொண்டால்
மயக்கம் தெளிந்துவிடும்

- கவியரசர்

இப்படி தான் ஏரிகளை தூர்வார வேண்டும் நகரங்களில்....

விதிமீறிய கட்டிடங்களை உடைக்க வேண்டும்.....





ஒரு உயிரை
நீ நேசிப்பது நிஜம் என்றால்
அதைப் பறவை போல்
பறக்க விடு!



அது உன்னை
நேசிப்பது உண்மை என்றால்
அது மீண்டும் உன்னை
தேடி வரும்..!



வீட்டு வாசலுக்கே
வந்து வியாபாரம்
பண்ண தள்ளு
வண்டிக்காரன்கிட்ட
நம்மள வாங்க விடாம
வெட்டிகௌரவத்துக்கும்,
பொழுதுபோக்குக்காவும் "Shopping" என்ற
பெயர்ல பெட்ரோல்/டீசல் போட்டு "Toll
Gate"க்கு கப்பம் கட்டி ,"Parking charges"
கொடுத்து அவன தேடி வர வச்சி



நம்மளயே வண்டி
தள்ள வைப்பான்
பாரு.

அதுக்கு அப்புறமும் வரிசையில் நின்று
வாங்கிய பொருட்களுக்கான விலையுடன்
கூடிய "TAX"யும் கட்டுனா, கடைசியா
கேட்பான் பாரு சார் பை வேணுமா ₹21/-
ரூபாய் தான்.
"கார்ப்ரேட்காரன்" பண்ற இந்த மூளை
சலவையை தான் இங்க நாகரீக
வளர்ச்சினு நம்பி ஏமாந்துகிட்டு
இருக்கோம்

நீ யாரை சந்திக்க வேண்டும்
என்பதை காலம் முடிவு
செய்கிறது..!
உன் வாழ்க்கையில் யார் இருக்க
வேண்டும் என்பதை உன் மனம்
முடிவு செய்கிறது..!
உன்னுடன் யார் இருக்க முடியும்
என்பதை உன் நடத்தை முடிவு
செய்கிறது...!

**சிந்தனைக்கு...!**

"அறிந்து கொள் ! நீ ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் வெற்றி பெறவில்லையானால், அதில் உனக்கு ஒரு நன்மை இருக்கலாம்.

அல்லது நீ அதற்கு இன்னும் தயார் நிலையில் இல்லாதிருக்கலாம்.

அல்லது இப்போது நீ அதனை சுமக்க முடியாதவனாய் இருக்கலாம்.

அல்லது அதனை விட மிகச் சிறந்தது உனக்கு கிடைக்கப் பெறலாம்"

தேவையில்லாத
பிரச்சனைகளில் தலையிட்டால்.



மாவீரனும் மண்டியிட
வேண்டியது தான்...

ஒவ்வொரு முறையும்
கர்ப்பம் தரிக்காமலேயே
தாயாகி குழந்தைகளை



பெற்றுக் கொள்கின்றேன்
இப்படிக்கு: குப்பை தொட்டி.



இடத்துக்கு
தகுந்த மாதிரி
தன்னை மாற்றிக்
கொள்பவன்
மட்டுமே இன்று
ஜெயிக்கிறான்.

ஒவ்வொரு இதயத்திலும்
ஏதாவது ஒரு வலி
இருந்துகொண்டுதான்
இருக்கிறது. அதை
முட்டாள்கள்
கண்களிலும், அறிவாளிகள்
புன்னகையிலும்
மறைத்துக்
கொள்கிறார்கள்.

மனைவி பேசுவதை கேட்பது
என்பது, லோன்
அப்ளிகேஷனில் உள்ள Terms &
Condition படிப்பது போல...



உனக்கு ஒன்றும் புரியாது.
ஆனால் கடைசியில் I agree
என்று கையெழுத்து
போடுவாய்...

# கடமை தவறிய தமிழகம்

இன்றைய நிலையில் அமெரிக்கா முழுவதும் தமிழ் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 25,000 இருக்கும். ஆசிரியர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 2,000. அனைவருமே தன்னார்வலர்கள். கற்றுத்தருவதற்கான இடம், பாடத்திட்டம், செயல்முறை, அவை சார்ந்த நிர்வாக முறை ஆகியவற்றை அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம், கலிபோர்னியா தமிழ்க் கல்விக் கழகம் போன்ற அமைப்புகள் முன்னெடுத்துவருகின்றன.

அமெரிக்கப் பள்ளிகளில் முதல் மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. இரண்டாம் மொழி என்பது நடுநிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாகவும் மேல்நிலையில் கட்டாயப் பாடமாகவும் இருக்கிறது. இரண்டாம் மொழியாக ஸ்பானிஷ், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், சீனம் போன்ற மொழிகளை மாணவர்கள் பயில்கின்றனர். இதற்குப் பதிலாக தமிழ் படிக்கும் சூழல் இன்றில்லை. ஆனால், நல்ல மாற்றங்கள் தொடங்கியுள்ளன. அதாவது, இரண்டாம் மொழி படிப்பவர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகளில் (கிரெடிட்) ஒரு பகுதியை தமிழ் படிப்பவர்களுக்கு வழங்க சில மாகாணங்கள் முன்வந்துள்ளன.

தமிழ் கற்றல் என்பது பெற்றோரின் விருப்பமாக மட்டுமே இருந்தது. ஆனால், உருவாகியுள்ள புதிய சூழலில் கல்வி நிலையப் பயன்பாடும் அதற்கு உண்டு என்ற நிலை மாணவர்களின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரித்துள்ளது. வார விடுமுறைகளை தமிழ் மொழிக்காக இழக்கிற மாணவர்களுக்கு மதிப்பெண் சார்ந்த பயன்பாடு இயல்பான ஊக்கத்தை உருவாக்கும்.

இவை தவிர, இன்னொரு நல்வாய்ப்பு கலிபோர்னியாவிலிருந்து தொடங்கியுள்ளது. பள்ளி இறுதி வகுப்பில் ஆங்கிலம் தவிர்த்த இருமொழிக்கான தேர்வில் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு 'இருமொழிக் கல்வி முத்திரை' வழங்க கலிபோர்னியா மாகாணம் முடிவு செய்துள்ளது. அந்த இரு மொழிகளைத் தேர்வு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டுள்ள பட்டியலில் தமிழும் இடம்பெற்றுள்ளது. இது அமெரிக்காவின் மற்ற மாகாணங்களில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு நன்மையை உருவாக்கியுள்ளது. ஹார்வர்டு தமிழ் இருக்கையைத் தொடர்ந்து ஹூஸ்டன், ஸ்டோனி புரூக் ஆகிய பல்கலைக்



கழகங்களிலும் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. பாலா சுவாமிநாதன் முயற்சியில் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்கப்பட உள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் திருமூலர் சித்த மருத்துவ இருக்கையொன்று அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இவையெல்லாம் கல்விப்புலத்தில் தமிழ் மொழி சார்ந்த ஆய்வுகளையும்

அடையாளங்களையும் வலிமைப் படுத்தும் முக்கிய நகர்வுகள். 1996-ல் குமார் குமரப்பன் தலைமையில் நிதி திரட்டப்பட்டு கலிபோர்னியா பெர்க்லி பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் தமிழ் இருக்கை நிறுவப்பட்டது. இந்த 25 ஆண்டுகளில், மேலைக் கல்விப்புலத்தில் தமிழ் குறித்த ஆய்வுகளுக்கும் மொழி பெயர்ப்புகளுக்கும் அந்நிறுவனம் ஆற்றியுள்ள பங்கு மிகப் பெரியது. இன்று அதைப் போல பல பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைய இருப்பது நம் காலத்தின் மிக முக்கியமான நிகழ்வு.

உலகில் பல மாற்றங்கள் உருவாகியுள்ள கடந்த 10 ஆண்டுகளில், இந்நிறுவனத்தின் பாடநூல்கள் மட்டும் மாற்றம் என்பதையே அறியாதவையாக உள்ளன. தற்காலப் படுத்தும் செயல்முறையே அதில் இல்லை. இது கவலையோடு நாம் பேசவேண்டிய ஒன்று. ஆனால், அமெரிக்க வாழ் தமிழ்ச் சமூகம் இதை நம்பியில்லை.

அங்குள்ள சூழலுக்கும் சவாலுக்கும் தகுந்த தமிழ்க் கல்வி முறையை உருவாக்கிக்கொள்ள அது தொடர்ந்து முயன்றுவருகிறது.



அமெரிக்கத் தமிழ்ச் சமூகம் மொழிசார் செயல்பாட்டின் பரப்பெல்லையை வலிமை யோடு விரித்துச் செல்கிறது. சரி, தமிழகத்தி லிருந்து நாம் இவர்களுக்கு என்ன செய்தோம்? தமிழகத்துக்கு வெளியில் இருப்பவர்கள் தமிழைக் கற்கவும் கற்றுத்தரவும் தேவையான பாடநூல்களையும், கருவிநூல்களையும் உருவாக்கத்தான் தமிழக அரசு, தமிழ் இணைய கல்விக்கழகத்தை நிறுவியது.

சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட உலகின் பிற பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாட முறைகளிடமிருந்து அது தனக்கான வடிவத்தைக் கண்டடைகிறது. அரசும் அரசுசார் நிறுவனங்களையும் நம்பி தமிழ் எப்போதும் இருந்ததில்லை. ஆனால், தமிழின் வளர்ச்சிக்கு இந்நிறுவனங்களை உந்தித்தள்ள வேண்டியது நமது கடமை.

- தரணி

# நீட் தேர்வு
## பாதிக்கும் பள்ளிகல்வித்துறை




மருத்துவக் கல்விக்கான நீட் தேர்வை ஆண்டுக்கு இரண்டு முறை ஆன்லைன் மூலம் நடத்தும் முடிவை மத்திய அரசு கைவிட்டுள்ளது. இதுதொடர்பான புதிய கால அட்டவணை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய படிப்புகளில் சேர்வதற்கு நீட் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதேபோல், தொழில் நுட்ப படிப்புகளில் சேர்வதற்கு ஜேஇஇ எனப்படும் நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை என்ற வீதத்தில், இந்தத் தேர்வுகளை மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) நடத்தி வந்தது.

இந்தத் தேர்வு நடைமுறைகளை மாற்றியமைக்கும் விதமான அறிவிப்பை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் கடந்த மாதம் அறிவித்தது. அதில், நீட் மற்றும் ஜேஇஇ நுழைவுத் தேர்வுகள் இனி ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், இத்தேர்வுகள் சிபிஎஸ்இ-க்கு பதிலாக தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) என்ற அமைப்பு ஆன்லைன் முறையில் நடத்தும் எனவும் அதில் கூறப்பட்டி ருந்தது. இந்த அறிவிப்புக்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு எழுந் தது. இந்த அறிவிப்பை திரும்பப் பெறக் கோரி பல்வேறு எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தி வந்தன.

இதன் தொடர்ச்சியாக, இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்து வந்த மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், தமது பரிந்துரை அறிக்கையை மனிதவள மேம் பாட்டுத் துறைக்கு அண்மையில் அனுப்பியது. அந்த அறிக்கையில், நீட் தேர்வை ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தும்பட்சத்தில், மாண வர்கள் மிகுந்த மன அழுத்தத் துக்கு உள்ளாவார்கள் என்றும், ஆன்லைனில் தேர்வுகள் நடத்தப் பட்டால் கிராமப்புற மாண வர்கள் வெகுவாக பாதிக்கப் படுவார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில், நீட் தேர்வு தொடர்பான தமது நிலைப்பாட்டை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் மாற்றிக் கொண் டுள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் புதிய கால அட்டவணையில், நீட் தேர்வானது, அடுத்த ஆண்டு மே 5-ம் தேதி பழைய முறையிலேயே (தாள் மற்றும் பேனா) நடை பெறும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, மேற்குறிப்பிட்ட தேர்வுகளுக்கு தயார்படுத்திக் கொள்வதற்காக நாடு முழுவதும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும் என தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது. கிராமப்புற மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக இந்த மையங்கள் அமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- R.ஜெயா

# இந்தியா–பாக்கிஸ்தான்: இனி எப்படி இருக்கும்?



தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் விளங்குகிறது என்று அமெரிக்கா மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை மூத்த அதிகாரி அலிஸ் வெல்ஸ் கூறியிருப்ப தாவது: பாகிஸ்தானின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள இம்ரான் கான், அண்டை நாடுகளுடன் நல் லுறவை பேணுவேன் என்று கூறி யிருப்பது வரவேற்கத்தக்கது. அவரோடு இணைந்து பணியாற்ற அமெரிக்கா விரும்புகிறது. அதே நேரம் பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாத குழுக் களால் ஆப்கானிஸ்தானின் உள் நாட்டுப் பாதுகாப்பு கேள்விக் குறியாகி உள்ளது.

இன்றளவும் தீவிரவாதிகளின் புகலிடமாகவே பாகிஸ்தான் விளங் குகிறது. தலிபான்களின் முக்கிய பிரிவான ஹக்கானி நெட்வொர்க் பாகிஸ்தான் மண்ணில் செயல் படுகிறது. அந்த அமைப்பு உட்பட அனைத்து தீவிரவாத குழுக்கள் மீதும் பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானின் வளர்ச்சிக் காக இந்திய தரப்பில் சுமார் ரூ.20,945 கோடி அளவுக்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு வேறு எந்த நாடும் உதவி செய்யவில்லை. அதற்காக இந்தியாவை பாராட்டுகிறேன். காஷ்மீர் பிரச்சினை உட்பட எல்லா பிரச்சினைகளையும் இந்தி யாவும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ் தான் பிரதமர் இம்ரான் கான் கூறி யுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் கடந்த வாரம் பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பதவியேற்ற நிகழ்ச்சியில் முன்னாள் கிரிக்கெட் வீரரும் பஞ் சாப் அமைச்சருமான நவ்ஜோத் சிங் சித்து கலந்து கொண்டார். அப்போது, அந்நாட்டு ராணுவ தளபதி காமர் ஜாவேத் பஜ்வாவை சித்து கட்டியணைத்துக் கொண்டார். இது இந்தியாவில் கடும் விமர்சனத்துக்குள்ளானது. இதுபற்றி இம்ரான் கான் தனது ட்விட்டர் பதிவில் கூறியிருப் பதாவது: அமைதியின் தூதுவராக வந்த சித்து மீது பாகிஸ்தான் மக்கள் அன்பைக் காட்டினர். இதற்காக சித்துவை விமர்சிப்பவர்கள் அமை திக்கு எதிரானவர்கள். அமைதி இல்லாமல் மக்கள் முன்னேற முடியாது. காஷ்மீர் பிரச்சினை உட் பட எல்லா பிரச்சினைகளையும் இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். வறுமையை ஒழிக்கவும் மக்கள் முன்னேற்றம் அடையவும் பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கண்டு வர்த்தகத்தை தொடங்க வேண்டும்.

இவ்வாறு இம்ரான் கான் கூறியுள்ளார். இதனிடையே சண்டி கரில் சித்து அளித்த பேட்டியில், "பாகிஸ்தான் ராணுவ தளபதி காமர் ஜாவேத் பஜ்வா என்னிடம், குரு நானக் ஜெயந்தியை முன்னிட்டு இந்தியாவில் உள்ள சீக்கிய புனித தலமான தேரா பாபா நானக்கில் இருந்து பாகிஸ்தானில் உள்ள கர்தார்பூர் சாஹிப் தலத்துக்கு பாதையை திறப்பதற்கான முயற் சியில் ஈடுபட்டு வருவதாக கூறினார். உடனே, உணர்ச்சிப் பெருக்கில் அவரை கட்டியணைத் துக் கொண்டேன். இதில் உள்நோக்கம் இல்லை. இந்தியாவும் பாகிஸ் தானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்" என்றார்.

– ரவி


# கடந்த மாதம் (ஆகஸ்ட்) இதுதான் நடந்தது!

### முன்னாள் பிரதமர் வாஜ்பாய் மறைவு

முதுபெரும் அரசியல் தலைவரும் முன்னாள் பிரதமரும் கவிஞருமான அடல் பிகாரி வாஜ்பாய் உடல்நலக் குறைவால் டெல்லியில் ஆகஸ்ட் 16 அன்று காலமானார். அவருக்கு வயது 93. அவர் இந்திய பிரதமராக மூன்று முறை (1996 - 13 நாட்கள், 1998-1999, 1999-2004) பதவிவகித்துள்ளார். காங்கிரஸ் கட்சி அல்லாமல் ஐந்து ஆண்டுகால ஆட்சியை முழுமையாக நிறைவுசெய்த முதல் இந்தியப் பிரதமர் இவர்.

1924 டிசம்பர் 25 அன்று, மத்திய பிரதேசத்தின் குவாலியரில் பிறந்த இவர், பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவர். பாரதிய ஜன சங்கம்தான் பின்னாளில் பாரதிய ஜனதா கட்சியாக உருவெடுத்தது. நாடாளுமன்ற உறுப்பினராக 47 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். பத்து முறை மக்களவைக்கும் இரண்டு முறை மாநிலங்களவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 2015-ம் ஆண்டு இவருக்கு 'பாரத ரத்னா' விருது அளிக்கப்பட்டது.





### மூத்த அரசியல் தலைவர் மு.கருணாநிதி காலமானார்.

இந்தியாவின் மிக மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான கருணாநிதி உடல் நலக் குறைவால் 07.08.2018 அன்று காலமானார். அவருக்கு வயது 95. மாலை 6.10 மணிக்கு கருணாநிதியின் உயிர் பிரிந்ததாக காவேரி மருத்துவமனை அறிவித்துள்ளது.

திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924ம் ஆண்டு ஜூன் 3 ம் திகதி முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக பிறந்தார் கருணாநிதி. இவரது இயற்பெயர் தட்சணாமூர்த்தி ஆகும். எழுத்து துறை, நாடகம், திரைப்பட வசன கர்த்தா என பன்முக ஆளுமை கொண்டவர் கருணாநிதி. 1957ம் ஆண்டு குளித்தலை தொகுதியில் முதல் முறையாக எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்ட கருணாநிதி 2016ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் திருவாரூர் தொகுதியில் வெற்றி பெற்றார். மொத்தம் 13 சட்டசபை தேர்தல்களில் போட்டியிட்டுள்ள கருணாநிதி, ஒருமுறை கூட தோற்றது கிடையாது. அமைச்சராகவும், 5 முறை முதல்வராகவும் பணியாற்றியவர்.

### வாழ்வதற்குத் தகுதியான நகரம் வியன்னா

உலகில் வாழ்வதற்குத் தகுதியான நகரங்களில் முதல் இடத்தை ஆஸ்திரியா நாட்டின் தலைநகரமான வியன்னா பிடித்திருக்கிறது. எகானாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் வெளியிட்டிருந்த 2018 உலக வாழிடப் பட்டியலில் உலகின் 140 நகரங்கள் இடம்பெற்றிருந்தன. பாதுகாப்பு, செலவு, கல்வி, சுகாதாரம், வாழ்க்கைமுறை, உள்கட்டமைப்பு போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நகரங்களின் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரமும் மூன்றாவது இடத்தில் ஜப்பானின் ஒஸாகா நகரமும் இடம்பெற்றிருக்கின்றன. இந்தியாவின் தலைநகரமான டெல்லி 112-வது இடத்தையும் மும்பை 117-வது இடத்தையும் பிடித்திருக்கின்றன.

## சோம்நாத் சட்டர்ஜி காலமானார்



முன்னாள் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி கொல்கட்டாவில் மாரடைப்பு காரணமாக ஆகஸ்ட் 13 அன்று மறைந்தார். அவருக்கு வயது 89. இவர் 2004-2009-ம் ஆண்டு வரை மக்களவை சபாநாயகராகப் பதவிவகித்திருக்கிறார். 1968-ம் ஆண்டில் சிபிஎம் கட்சியில் சேர்ந்த இவர், அக்கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராக இருந்திருக்கிறார். பத்து முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இவர் 1996-ம் ஆண்டு சிறந்த நாடாளுமன்றவாதி விருதைப் பெற்றிருக்கிறார்.

இவர் மக்களவை சபாநாயகராகப் பதவி வகித்தபோது, இவர் முன்னெடுத்த முயற்சிகளால்தாம் நாடாளுமன்றத்தின் கேள்விநேரம் 2004 ஜூலை 5 அன்று முதன்முறையாக தொலைக்காட்சியில் நேரலையில் ஒளிபரப்பப் பட்டது. 'லோக்சபா' தொலைக்காட்சியும் இவரதுபதவிகாலத்தில்தான் தொடங்கப்பட்டது.

## ஒரே நேரத்தில் தேர்தல்கள் சாத்தியமல்ல!

அரசியலமைப்பில் திருத்தம் செய்யாமல் மக்களவைக்கும் சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமல்ல என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஓம் பிரகாஷ் ராவத் ஆகஸ்ட் 14 அன்று தெரிவித்தார். ஒரே நேரத்தில் மக்களவைக்கும் சட்டப்பேரவைகளுக்கும் தேர்தல்கள் நடத்துவதற்கு ஆளும் பாஜக அரசு தொடர்ந்து ஆதரவு தெரிவித்துவருகிறது.

இந்நிலையில், 2019 ஏப்ரல்-மே மாதத்தில் நடக்கவிருக்கும் மக்களவைத் தேர்தலுடன் 2018 டிசம்பரில் நடத்த வேண்டிய மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ராஜஸ்தான், மிசோரம் மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களை இணைந்து நடத்துவது சாத்தியமல்ல என்று தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. இதனால், மிசோரம் சட்டமன்றம் காலம் நிறைவடையும் டிசம்பர் மாதத்தின் நடுவில் மற்ற மூன்று மாநிலங்களான மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், ராஜஸ்தான் ஆகியவற்றுக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் இணைந்து நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வரலாற்றில் முதன்முறையாக ரூ.70.08-ஆக. 14 அன்று குறைந்தது. ரிசர்வ் வங்கியின் தொடர் முயற்சியின் காரணமாகப் பின்னர் ரூ.69.84 ஆக வர்த்தகமாகத் தொடங்கியது. அரசியல், பொருளாதார நெருக்கடியின் காரணமாக துருக்கி நாட்டின் பணமான 'லிரா' கடும்வீழ்ச்சியைச் சந்தித்துவருகிறது. கடந்த ஓர் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு நிகரான 'லிரா'வின் மதிப்பு 50 சதவீதம் குறைந்திருக்கிறது. சந்தையில் ரூபாயின் மதிப்பு குறைந்ததற்கு இது ஒரு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. 2018-ம் ஆண்டில் மட்டும் ரூபாயின் மதிப்பு 9 சதவீதம் குறைந்திருக்கிறது.



# வாத்தியார் பொழப்பு !

- கவிஞர் நிவேதிதா

வாத்தியாரு வேலதான்
வசதின்னு பேசுறாக...
உக்காந்தே காசு
பாக்கிறதா
ஊரெல்லாம் ஏசுறாக...

பசங்க மனசெல்லாம்
பாழடைஞ்சு கெடக்குது
சொல்லிக்கொடுத்த
வாத்தி மனசோ
சுக்கு நூறாக் கெடக்குது.

காலையில பள்ளியில
கால் வெச்சு போகையில...
டிக் டிக் டிக் மணியடிக்க
திக் திக்குன்னு மனசடிக்குது.

பசங்க முடியெல்லாம்
பக்காவா இருக்கனுமாம்
பக்குவமா சொன்னாலும்
மனசு பக்கு பக்குனு
அடிக்குது
பசங்க ஏதாச்சும்
பண்ணிடப் போறான்னு
துடிக்குது...

படிக்கச் சொன்னாலே
பசங்க துடிச்சு போற
காலமிது...
படிக்க வெக்கத்தான்
வாத்தியாரு வேலையிது..

கண்டிக்கவும் கூடாது
கட்டளையும் கூடாது
திட்டவும் கூடாது
குட்டவும் கூடாது

மார்க்கு மட்டும்
மலை போல
கொட்டனுமாம்..

ஆதாரு இருக்கான்னு
அக்கறையா கேக்கனுமாம்
அக்கவுண்டு நம்பரை
அட்ரசோட
வாங்கனுமாம்...

சீருடை இல்லைன்னா
சிரிச்சிக்கிட்டே
கேக்கனுமாம்...

அடிச்சி கிடிச்சு
போட்டாக்க
அம்புட்டுதான் வாழ்க்க...
கழியத் தொட்டதுக்கு
களிதானே வாழ்க்க...

பசங்க
கேலிப்பேச்சு
பேசினாலும்
கேக்கத்தான் வேணும்...
கத்தியாலக் குத்தினாலும்
வாங்கத்தான் வேணும்..

ஒத்த இதயத்த
பிளந்தெடுக்க
எத்தனை அம்புகதான்
கிளம்பி வருமோ?

பெத்தவங்க
ஒருபக்கம்
மத்தவங்க
மறுபக்கம்.
சமூகம்
ஒருபக்கம்
சங்கடங்கள்
மறுபக்கம்
அம்புகள
தொடுத்து நின்னா
அப்பாவி வாத்தியாரு
என்னதான்
பண்ணுவாரு...

வாத்தியாரை
மதிக்கும்
வசந்த காலம் போச்சு
வாத்தியாரை
மிதிக்கும்
கலி காலம் ஆச்சு...

இப்பதெல்லாம்
நெறைய வாத்தியார்கள்
கரும்பலகையை
கையால் துடைப்பதில்லை
கண்ணீரால்
துடைக்கிறார்கள்.
சாக்பீஸ்
துகள்களால்
நுரையீரலை
அடைக்கிறார்கள்..

வாத்தியாரு வேலதான்
வசதியின்னு பேசுறாக...
உக்கந்தே காசு
பாக்கிறதா
ஊரெல்லாம் ஏசுறாக...

அவங்களிடம்
சொல்லுங்க...
"வாத்தியார் பொழப்பு
வாழ்க்கையில் இழப்பு"
என்று....



# தத்தளிக்கும் கேரளம்

# உதவாத உதவிக்கரங்கள்




மழை, வெள்ளத்தால் பெரும் பாதிப்பைச் சந்தித்திருக்கும் கேரளத்துக்கு உதவ முன்வரும் வெளிநாடுகளின் நிதியைப் பெறுவது தொடர்பான மத்திய அரசின் நிலைப்பாடு விவாதத்துக்குரியது. தற்போதைய கொள்கையின்படி, பேரிடர்களின் போது வெளிநாடுகளின் நிதியுதவியை ஏற்பதில்லை என்றும், தேவையான உதவிகள் உள்நாட்டு முயற்சிகள் மூலம் நிறைவேற்றப்படும் என்றும் வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார். பேரிடரின்போது உதவி பெறுவது சகஜமாகயிருக்கும் நிலையில், நட்பு நாடுகளிடமிருந்து நீளும் உதவிக்கரங்களை மறுதலிப்பது ஆக்கபூர்வமான முடிவல்ல.

கேரளத்துக்கு நிதி உதவி வழங்க தாய்லாந்து, மாலத்தீவுகள் போன்ற நாடுகள் முன்வந்த நிலையில், வெள்ளப் பேரிடர் நிவாரண நிதிக்காக வெளிநாடுகளிலிருந்து நன்கொடைகளை ஏற்றுக் கொள்வதில்லைஎன இந்தியாசார்பில் தெரிவிக்கப் பட்டது. இதற்கிடையே, ஐக்கிய அரபு அமீரகம் ரூ.700 கோடி வழங்க முன்வந்ததாகச் செய்திகள் வெளியாகின. பிறகு, ஐக்கிய அரபு அமீரகம் அதை மறுத்தது. எப்படியாகிலும் இந்த விஷயத்தில் மத்திய அரசின் நிலைப்பாடு சர்ச்சைகளுக்கு வித்திட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. நம்முடைய அரசே பல நாடுகளுக்கு இதுபோன்ற சமயத்தில் உதவுவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் நிலையில், நாம் உதவிபெறுவதில் என்ன தவறு? பெருந்துயர்க் காலங்களில் இப்படியான உதவிகள் ஒருவருக்கொருவர் அரவணைத்துக் கொள்வதற்கான சின்ன வெளிப்பாடுதான்.

2004-ல்ஏற்பட்ட சுனாமிப் பேரலைகள் பெரும் நாசத்தை ஏற்படுத்தியபோது, 'வெளிநாடுகளின் உதவிகளை ஏற்பதில்லை' என்ற முடிவை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எடுத்தது. வீண் கவுரவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அந்த முடிவை மரபாகத் தொடர்ந்து பின்பற்ற வேண்டுமா என்பதை மோடி அரசு பரிசீலிக்க வேண்டும். தவிர, வெளிநாடுகளின் நிதியுதவியை ஏற்பதில்லை என்று 2016-ல் பாஜக தலைமையிலான மத்திய அரசு வெளியிட்ட தேசியப் பேரிடர் மேலாண்மை திட்டத்தின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. நல்லெண்ண நடவடிக்கையாக வெளிநாடுகள் உதவி அளிக்க முன்வந்தால் மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் அந்த அறிக்கை சொல்கிறது. எனவே, மத்திய அரசு இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கேரளம் சந்தித்திருப்பது வரலாற்றுத் துயரம். தனியார் அமைப்புகள், பொதுச் சமூகம், அனைத்து மாநிலங்கள் என்று ஒவ்வொரு தரப்பும் தன்னாலான உதவிகளை அம்மாநிலத்துக்கு அளிப்பது முக்கியம். மத்திய அரசு ரூ.600 கோடி இதுவரை அளித்திருக்கிறது. 'இது முதல் கட்ட நிதிதான், மதிப்பீடு செய்த பின்னர் தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கூடுதல் நிதி ஒதுக்கப்படும்' என்று உள்துறை அமைச்சகம் கூறியிருக்கிறது. மத்திய அரசு தன்னாலான முழு உதவிகளையும் செய்ய வேண்டும்.

உலகெங்கும் இருக்கும் ஜனநாயக அரசுகள் இன்னொரு நாட்டுக்குப் பேரிடர் என்றால் ஓடோடி உதவுவதுதான் வழக்கம். நாமும் அவ்வழக்கத்தைக் கொண்டிருக்கிறோம். இதில் கவுரவம் பிம்ப அரசியலுக்கு வேலையில்லை. நிதி உதவி, நிபுணர்களின் ஆலோசனை, மீட்பு நிவாரணத்துக்குத் தேவைப்படும் கருவிகள் கலன்கள் ஆகியவற்றைக் கேரளம் பெறத் தடையேதும் இருக்கக் கூடாது!

– ஆபரஹாம்

# ஸ்மார்ட் போனில் போலி அப்ளிகேஷன் எச்சரிக்கை



ஸ்மார்ட்போனின் பயன்பாட்டை மேம்படுத்துவதே அதற்கான செயலிகள்தாம். ஐபோன், ஆண்ட்ராய்டு போன்களில் பயன்படுத்தக்கூடிய செயலிகள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. இவற்றில் பிரபலமான செயலிகள் நூற்றுக் கணக்கில் இருக்கும். பரவலாக எல்லோரும் பயன்படுத்தும் செயலிகள் தவிர, ஒவ்வொருவரும் பயன்படுத்தும் தனிப்பட்ட செயலிகளும் அநேகம் இருக்கின்றன. செயலிகளைத் தேடி கண்டறியவும் நிறைய வழிகள் இருக்கின்றன.

ஆனால், புதிய செயலிகளைப் பயன்படுத்த முயலும்போது, எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஏனெனில், செயலிகளும் போலிகள் நூற்றுக் கணக்கில் உண்டு. அண்மையில்கூட, கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து, முன்னணி வங்கிகளின் செயலிபோன்ற தோற்றத்தைத் தந்த மூன்று செயலிகள் நீக்கப்பட்டன. போலியான செயலிகள், அந்தரங்கத் தகவல்களைச் சேகரிப்பதில் தொடங்கி பலவிதமான வில்லங்கத்தை ஏற்படுத்தலாம். நிதி சார்ந்த செயலிகள் எனில், பொருளாதார இழப்பும் ஏற்படலாம். எனவே, புதிய செயலியைத் தர விறக்கம் செய்யும்போது, அது போலி அல்ல என்பதை உறுதி செய்வது அவசியம்.

செயலிகளைத் தரவிறக்கம் செய்யும்போது முதலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விதி, அதிகாரப்பூர்வ ஸ்டோரிலிருந்து மட்டுமே செயலிகளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும். ஐபோன் எனில் ஆப்ஸ்டோர், ஆண்ட்ராய்டு எனில் கூகுள் பிளேஸ்டோரிலிருந்து செயலிகளைத் தரவிறக்கம் செய்ய வேண்டும். மூன்றாம் தரப்பிலிருந்து செயலிகளைத் தரவிறக்கம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. மின்னஞ்சல் அல்லது வாட்ஸ் அப்பில் வரும் இணைப்புகளைப் பின்தொடர்ந்து சென்று செயலிகளைத் தரவிறக்கம் செய்யக் கூடாது.

அதிகாரபூர்வ இடங்களிலிருந்து செயலிகளைத் தரவிறக்கம் செய்வது முதல் கட்டப் பாதுகாப்பு. ஆனால், இதனால் மட்டுமே செயலிகள் எல்லாமே பாதுகாப்பானவை என்று சொல்லிவிட முடியாது. பிளேஸ்டோர்/ ஆப்ஸ்டோரிலும் போலி செயலிகள் இருக்கலாம். இவற்றைக் கண்டறிய தரவிறக்கம் செய்யும் முன், முதலில் அவற்றுக்கான சக பயனாளிகளின் விமர்சனக் கருத்துகளைப் படித்துப் பார்க்க வேண்டும். விமர்சனங்களின் அடிப்படையிலான மதிப்பீட்டையும் கவனிக்க வேண்டும். விமர்சனக் கருத்துகளைப் படிக்கும்போதே செயலியின் நம்பகத்தன்மை பற்றிய விடை கிடைக்கும்.

செயலிக்கான விமர்சனங்களும் ஒரு வழி காட்டிதான். போலியான செயலியை உருவாக்குபவர்களே போலியான விமர்சனங்களையும் எழுத ஏற்பாடு செய்கின்றனர். எனவே, விமர்சனங்களைப் படித்த பிறகு, செயலியின் விளக்கத்தைப் படித்துப் பார்க்க வேண்டும். செயலிக்கான விளக்கம் தொழில்முறையாக அமையாமல், இலக்கணப் பிழை, எழுத்துப் பிழைகளோடு இருந்தால் அவை வில்லங்கச் செயலியாக இருக்கலாம். அதேபோல, செயலிக்கான அறிமுகம் சுருக்கமாக இருந்தாலும் சந்தேகம் கொள்ள வேண்டும்.

செயலிகளுக்கான அறிமுகப் பக்கத்தில் பல விதமான தகவல்களை இருப்பதைக் காணலாம். அவற்றில் செயலியை உருவாக்கிய நிறுவனம், டெவலப்பர் பற்றிய விவரமும் இடம் பெற்றிருக்கும். டெவலப்பரின் மின்னஞ்சல் முகவரி, இணையதள முகவரியும் கொடுக்கப் பட்டிருக்கும். அந்த இணைப்புகளை 'கிளிக்' செய்தால் அவர்களுடைய அதிகாரபூர்வ தளம் அல்லது வலைப்பதிவுக்குச் சென்று மேலும் விவரங்களை அறியலாம். போலிச் செயலி எனில் இந்த விவரங்கள் எல்லாம் மிகச் சுருக்கமாகவே இருக்கும். அந்தச் செயலியின் உருவாக்கம், சிறப்பம்சங்கள் பற்றி அதிகத் தகவல்களை அறிந்து கொள்ள முடியாது.

குறிப்பிட்ட செயலிக்கான தேடலில் ஈடுபடும் போது வரும் படங்களைக் கவனியுங்கள். போலிச் செயலி உருவாக்குபவர்கள், அவற்றுக்கான விளக்கப் படங்களைக்கூட எங்கிருந்தாவது எடுத்துப் பயன்படுத்தியிருக்கலாம். ஒரு செயலி எந்த அளவு தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளது எனும் எண்ணிக்கையைக் கவனியுங்கள். லட்சக் கணக்கில் இந்த எண்ணிகை இருந்தால் பரவலாக அந்தச் செயலி பயன்படுத்தப் படுவதாகப் பொருள்.

சில நூறு பேர் மட்டுமே பயன்படுத்தும் செயலி என்றால் போலியாக இருக்க வாய்ப்பு அதிகம். அதேபோல செயலி அறிமுகமான காலத்தையும் கவனிக்க வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகமாகியும் அநேகரால் பயன்படுத்தப்படவில்லை எனில், அந்தச் செயலி குறித்து எச்சரிக்கை தேவை.

இவை தவிர, ஒரு செயலி கவனத்தை ஈர்த்ததும் அது தொடர்பான தகவலை இணையத்தில் தேடிப் பார்க்க வேண்டும். தொழில்நுட்ப விமர்சனத் தளங்களில் அந்தச் செயலி பற்றிய விமர்சனங்கள், அறிமுக செய்திகள் இருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும். அதிகாரபூர்வச் செயலி என்றால் அவை தொடர்பான செய்திகளை ஒன்றுக்கும் மேற்பட்ட தளங்களில் பார்க்க வேண்டும்.

- V.சங்கர்


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# திமுகவின் புதிய

திமுகவின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறார் மு.க.ஸ்டாலின். கட்சிக்குள் கொண்டாட்டங்கள் களைகட்டியிருக்கின்றன. கட்சி சாராதவர்கள் மத்தியிலும் இது தொடர்பாக ஒரு நேர்மறை எண்ணம் எதிரொலிப்பதைப் பார்க்க முடிகிறது. தமிழகம் இன்று எதிர்கொண்டிருக்கும் பல்வேறு சவால்களுக்குத் தீர்வு காண்பதில் ஒரு அரசியல் தலைவராக ஸ்டாலின் முழு மூச்சுடன் ஈடுபடுவாரா எனும் அடிப்படையில் உருவாகியிருக்கும் மனநிலையாக இதைக் கருதலாம்.

திமுகவின் கட்சித் தலைவர் பொறுப்புக்கான தகுதியை ஸ்டாலின் பல ஆண்டுகளுக்கு முன்பே பெற்றுவிட்டார். ஆனாலும், தலைவர் பொறுப்பை 50 ஆண்டுகளாகத் தன் வசம் வைத்திருந்த கருணாநிதியின் மறைவுக்குப் பிறகுதான் ஸ்டாலின் அந்த இடத்தை நோக்கி நகர்ந்திருக்கிறார். இதுவரைக்கும் கட்சியின் தலைமைப் பொறுப்பு மீதே பெருமளவில் கவனத்தைக் குவித்திருந்தார் ஸ்டாலின். இனி கட்சியைப் பலப்படுத்துவதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

கருணாநிதி போலவே விமர்சனங்களுக்குக் காது கொடுக்கும் வழக்கம் ஸ்டாலினிடமும் இருக்கிறது. கட்சியின் தவறுகளைத் திறந்த மனதுடன் ஒப்புக்கொள்ளும் அவரது இயல்பு, தற்போதைய தமிழக அரசியல் சூழலில் குறிப்பிடத்தக்க ஒன்று. திமுகவின் எதிர்காலம் மட்டுமல்ல; அதன்வழியாகத் தமிழக அரசியல் நிலையையும் மேம்படுத்த வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது. திமுகவின் பலம் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள். அதேநேரத்தில் பலமே பலவீனமாகவும் இருக்கிறது. காலவரையறையற்று கட்சிப் பதவியில் ஒருவர் அமர்ந்திருப்பது, அக்கட்சியின் வளர்ச்சியையும் இயக்கத்தையும் தேக்கமுறச் செய்கிறது. வாரிசு அரசியல் என்ற வரையறைக்குள் ஸ்டாலினைப் பொருத்திப் பார்க்க முடியாது. ஆனால், இதையே காரணம் காட்டி மாவட்டம், ஒன்றியம், நகரம் அளவுக்கு அந்தந்த நிர்வாகிகள் தங்கள் வாரிசுகளை உள்ளே கொண்டுவர அனுமதிக்கக் கூடாது. ஸ்டாலினுமே உதயநிதி விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். வாரிசு அரசியல், கட்சிக்குள் புதியவர்கள் நுழைவதற்கு வழியடைத்து நிற்கும்.

மாணவர்களாலும் இளைஞர்களாலுமே வளர்ந்த கட்சி திமுக. செயலூக்கம் மிக்க இளைஞர்களாகக் கட்சிப் பதவிக்கு வந்தவர்கள்தான் இன்றைக்கு இரண்டாம் கட்டத் தலைவர்களின் பட்டியலில் இருக்கிறார்கள். ஆனால், அதைத் தங்களது பிள்ளைகளுக்கு தந்தைவழிச் சொத்தாக விட்டுச்செல்வார்கள் என்றால், கட்சியை அது சீரழித்துவிடும். படிப்பகங்களிலும் மாலை நேரக் கூட்டங்களில் வளர்த்தெடுக்கப்பட்டது திமுக.. இன்றைக்கு வாசிப்பு, அறிவியக்கத்தில் எந்த அளவுக்கு அதற்குத் தொடர்பு உள்ளது என்ற கேள்வி அர்த்தமுள்ளது.

கட்சியின் தொண்டர்கள் பலரும் பொருளாதார நிலையில் பின்தங்கி நிற்பவர்கள். அவர்கள் கட்சியின் மேலிடங்களை நோக்கி நகர இன்றைய கலாச்சாரம் இடமளிக்கிறதா? திமுகவை அண்ணா தொடங்கிய காலத்தில், ஒரு அரசியல் கலாச்சாரமாக அவர் வளர்த்தெடுத்த எளிமை இன்று சரிந்துவிட்டது. இந்தச் சரிவு சரிசெய்யப்பட வேண்டும்.

ஒரே தேசம், ஒரே மொழி என்ற அரசியல் கொள்கை வகுக்கப்பட்டபோது, அதைக் கடுமையாக எதிர்த்து களம்கண்டு வென்ற அரசியல் கட்சி திமுக. மாநிலங்களின் தனித்துவங்களை மறுத் ஒற்றைமயப்படுத்தும் அந்தக் குரல், இப்போது இன்னும் வலுவாக எல்லா நிலைகளிலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. சாதி-மத அரசியல்

# தலைமை சாதிக்குமா ?

பேருரு கொண்டு நிற்கிறது. இந்தச் சூழலில், மாநில உரிமைகள், மதச்சார்பின்மை, சாதி ஒழிப்பு ஆகிய அரசியல் விழுமியங்களுக்கான திமுகவின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். "மதவெறியால் மத்திய அரசு மக்களாட்சி மாண்பைக் குலைக்கும் செயல்களில் ஈடுபடு கிறது" என்று பேசியிருப்பதன் மூலம் நம்பிக்கையை விதைத்திருக்கிறார் ஸ்டாலின்.

தமிழகத்தின் பிரத்யேக அடையாளங்களில் ஒன்றான 69% இடஒதுக்கீட்டுக்கு சட்ட ரீதியான ஆபத்துகள் ஏற்பட்டிருக்கும் சூழலில், நீதிமன்றத்தில் வலுவாக வாதாட வேண்டும் என்று தமிழக அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார் ஸ்டாலின். இடஒதுக்கீடு விஷயத்தில் சமூக நீதியில் இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் தமிழகம் இருப்பதில் திமுகவுக்கு முக்கியப் பங்கு உண்டு. இன்றைக்கு, அதைப் பாதுகாப்பதில் ஸ்டாலின் தலைமையிலான திமுகவுக்கு மேலும் அதிகப் பொறுப்பு இருக்கிறது. திமுக எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில், போராட்டங்கள்தான் அக்கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தன. அந்தப் பழைய அடையாளத்தை ஸ்டாலின் மீட்டெடுக்க வேண்டும். அதேசமயம், சட்ட மன்றம் என்றாலே புறக்கணிப்பு எனும் நிலை தொடரக் கூடாது. அடையாள நிமித்தமான போராட்டமாக அது மாறிவிடக் கூடாது. ஆக்கபூர்வமான விவாதங்களில் ஈடுபடுவதுடன் மாநில உரிமை தொடர்பான விஷயங்களில் ஆளுங்கட்சியுடன் சேர்ந்தும் திமுக செயல்பட வேண்டும்.



திமுக எனும் கட்சியையும் தாண்டி, ஒட்டுமொத்த தமிழகத்தின் மேம்பாட்டுக்கான, தற்போதைய உலகமயச் சூழலில் தாக்குப் பிடித்து நிற்பதற்கான ஒரு தொலைநோக்குத் திட்டத்தை முன்வைக்க திமுக தயாராக வேண்டும். பல துறை அறிஞர்களின் விவாதங்களோடு அது வடிவம்காண வேண்டும். வேளாண் துறை, பின்னலாடை, மீன்பிடித் தொழில், கால்நடை வளர்ப்பு, நெசவாளர்கள், அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், மின்உற்பத்தி, உள்கட்டமைப்பு, பேரிடர் மேலாண்மை போன்ற முக்கிய விஷயங்கள் தொடர்பான செயல்திட்டங்களை வகுக்க வேண்டும்.

தலைவர் பொறுப்புக்கு முந்தைய ஸ்டாலினின் அடையாளம் என்பது கட்டுக்கோப்பான ஓர் இளைஞர் அணிக்குத் தலைமை வகித்தது. ஆனால், இன்றைய திமுகவின் மிகப் பெரிய பலவீனம், இளைய சமூகத்துடன் அக்கட்சிக்கு இருக்கும் பொருத்தப்பாடின்மைதான். இந்நிலையில், இளைஞர்களின் தலைவராக அடுத்த தலைமுறை இளைஞர்களையும் அவர் அரசியலுக்கு, கட்சிப் பொறுப்புகளுக்கு, ஆட்சிப் பொறுப்புகளுக்குக் கொண்டுவர வேண்டும்!

– ஆசிரியர்

# Dr. அன்புமணி ராமதாஸுடன்

















# த.ப.எ.ச நிர்வாகிகள் சந்திப்பு











தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அவர்களை சந்தித்து 3வது மாநில மாநாட்டில் அறிவித்த பத்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக கலந்து ஆலோசித்தார்கள். அப்பொழுது மக்கள் விசாரணை எட்டாம் ஆண்டு சிறப்பு இதழை டாக்டர் அன்புமணி வெளியிட மக்கள் விசாரணையின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான முனைவர் ஆ.மவுரியன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

# ஒருபக்க சிறுகதை

மன்னரின் அரசவைக்கு ஒருவர் தான் ஆரம்பிக்க இருக்கும் கல்லூரிக்கு நிதி கேட்டு வந்தார். அந்த மன்னர் இந்து என்றாலே கோபப் படுபவர். " நிதி தானே... இந்தா என தன் காலில் இருந்த ஷூவை மேல் வீசி எறிந்தார். வந்தவர் எதிர்பாராத நிகழ்வால் நிலைகுலைந்தாலும்..

ஒருபக்கம் அவமானம். மனதை கஷ்டப்படுத்தியது. இருந்தாலும் ஒரு நல்ல விஷயத்துக்காகத் தானே அவமானப்படுகிறோம். என தேற்றிக்கொண்டு. மன்னருக்கு நன்றி சொல்லி கிளம்பினார். மன்னருக்கு ஒன்றும் புரியவில்லை. என்னடா நாம் அவமானப்படுத்த ஷூவை வீசினோம், நன்றி சொல்லி செல்கிறானே...

என ஒருவரை எப்படி அவமானப்படுத்த முயன்றாலும் எதிரிலிருப்பவர் தன் நோக்கத்தில் உறுதியாய் இருந்தால் என்ன செய்ய முடியும். மேலும் தன்மேல் நம்பிகையில்லாதவர்கள் தான் அவமானமாய் உணர்ந்து எமோஷன் ஆவார்கள். வெளியில் ஒரே சத்தம். அமைச்சரை அழைத்த மன்னர் என்ன அங்கே... என்றார்.

நீங்க எறிந்த ஷூவை ஏலம் போடுகிறான் மன்னா... கல்லூரி கட்ட மன்னர் தந்த ஷூ... என்றே கூவுகிறான்! என்றார். எவ்வளவு போகிறது... படு கேவலமாய் பத்து நாணயத்துக்கு மேல் ஏலம் போகவில்லை என்றார். அய்யய்யோ... என்ன விலையானாலும் ஏலம் எடு... என்றார் மன்னர். அமைச்சரும் ஐம்பது லட்சம் கொடுத்து எடுத்தார்.

ஷூ பாதிகட்டிடம் கட்ட கிடைத்து விட்டது. அடுத்த ஷூவை எப்போது போடுவீர்கள் என்றார். மன்னர் வந்தவரின் சாமார்த்தியத்தையும் சகிப்புத்தன்மையையும் எண்ணி தாமே கல்லூரியை கட்டித்தந்தார். அது தான் தற்போதைய காசி பனாரஸ் பல்கலைக்கழகம். அவமானத்தை யார் ஒருவர் அவமானமென உணர்கிறார்களோ! அவர்கள் ஒருநாளும் எதையும் ஜெயிக்க முடியாது. எப்போதும் நோக்கம் நிறைவேறுவது தான் முக்கியம். மான அவமானங்களல்ல.

நாம் செய்வது நல்லதாய் இருக்க வேண்டும். ஒவ்வொரு அவமானமும் வெற்றிக்கான படிக்கட்டுக்கள் என எண்ணுவோம். எந்தவொரு வளர்ச்சியையும் நீண்ட நாட்கள் யாராலும் தடுத்து நிறுத்த முடியாது...



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

Makkal Visaranai Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed , at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial

Hi-Tech

Healing Your Life

# CERAGEM




செராஜெம் தென்கொரிய நாட்டின் மிகச்சிறந்த இயற்கை மருத்துவ முறையாகும்.

1998 ஆம் ஆண்டு முதல் சுமார் 70 நாடுகளில் ஊசி, மருந்து, மாத்திரை மற்றும் பக்க விளைவு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ உதவி செய்து வருகிறது.

செராஜெம் இயற்கையான முறையில் நம் உடலில் ஆணி வேரான முதுகெலும்பில் கீழ்கண்ட செயல்பாட்டின் மூலம் மறுவாழ்வு அளிக்கிறது.

செராஜெம் பற்றிய கூடுதல் விவரங்களை எங்களின் மையத்திற்கு வந்து குணமடைந்தவர்கள் விவரங்களையும் ஒப்பு வாக்குமூலங்களையும் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். இது ஒரு ISO 9001-2000 தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்

## இதன் செயல்பாடுகள்

- இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
- இரத்தத்தை சுத்திகரித்தல்
- இரத்த உற்பத்தியை அதிகரித்தல்
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துதல்
- மன அழுத்தத்தை போக்குதல்
- முதுகெலும்பை வரிசைப்படுத்துதல்

## மனிதன் உடலில் நோய் வரக் காரணங்கள்...

1. முதுகு தண்டு வடத்தில் ஏற்படும் அழுத்தம் மாற்றம்
2. இரத்தம் அசுத்தமாக இருப்பது, உடலில் கழிவுகள் தேங்குவது
3. இரத்தம் சரியில்லாமல் இருப்பது.
4. உடல் உஷ்ணம் சீராக இல்லாதது
5. சக்தி ஓட்டம் இல்லாதது.

இந்த காரணங்களை சரி செய்யும் விதமாகவே செராஜெம் தெர்மல் அக்குபிரஷர் மசாஜரை, பல வருட ஆராய்ச்சிக்குப் பின்பு சூரிய ஒளியிலிருந்து வெளிப்படும் Far Infrared Rays-ஐ உள்ளடக்கிய Jade கற்களைக் கொண்டு தயாரித்துள்ளனர்.

இந்த மசாஜரில் Massage, Acupressure, Moxibushion, Chiopractic, Thermal Energy என 5 விதமான மாற்று முறை மருத்துவங்களும் உள்ளடங்கியுள்ளன.

இதில் தினமும் 40 நிமிடம் Theraphy எடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உண்டாகி, நோய்களைக் கட்டுப்படுத்தவும், நோய்கள் வராமல் தடுக்கவும் முடிகிறது.

உலகத்தில் முதன் முறையாக செராஜெம் இவ்வளவு பெருமை வாய்ந்த தெரபியை உலக மக்களுக்கு இலவசமாக அனுபவித்து பார்த்து முடிவு எடுக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணிமுதல் மாலை 5.20 மணிவரை
சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.20 மணிவரை

MMK பில்டிங், நெ.3, ஆலப்பாக்கம் மெயின் ரோடு, (தேவி அகாடமி பள்ளி எதிரில்) வளசரவாக்கம், சென்னை - 600 087.

Ph : 044 - 4854 3558, Cell : 91766 75494

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month


# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything












No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33334, 044 - 4861 5321**